# வாழ்நாட்களில் நீதியை நிறைவேற்றுங்கள்

ஒரு ஊரிலே வசித்து வந்த எஜமானனானவன், குறிப்பிட்ட தூர தேசமொன்றிற்கு செல்ல வேண்டியிருந்ததால், தன் ஊழியர்களை அழைத்து, தான் மறுபடியும் வரும்வரைக்கும் தன்னுடைய பண்ணையை கருத்தோடு பராமரிக்கும்படி அறிவுரை கூறி சென்று விட்டான். நாட்கள் சென்ற பின்பு, தங்கள் எஜமானனானவன் வரக் காலமாகும் என்று கூறி, ஊழியர்களில் பலர், தங்கள் எஜமானானவனுடைய சொத்துக்களை கொள்ளையடிக்கவும், தங்களுக்கு கொடுக்கப்பட்ட வேலையை கவனியாமலும் அசட்டையோடு வாழ்ந்து, தங்கள் விருப்பங்களை செய்து வந்தார்கள். ஆனால், அவர்கள் மத்தியிலே இருந்த தன் எஜமானனுக்கு விசுவாசமுள்ள சிறிய ஊழியனொருவனோ, தனக்கு கொடுத்த சிறிய பொறுப்பிலே மிகவும் கருத்துள்ளவனாக இருந்து வந்தான். அவனை கண்ட மற்ற ஊழியர்களில் சிலர், அவனை பரிகாசம் செய்து வந்தார்கள். வேறு சிலர், இவன் தன் வேலையை சரியாக செய்வதினாலே தங்களுக்கு பிரச்சனை உண்டாகலாம் என்று அவனை கடினமாக நடத்தி அவனை அடித்து உபத்திரவப்படுத்த ஆரம்பித்தார்கள். மற்றய ஊழியர்கள், செழிப்போடு, தங்கள் வாழ்க்கையை நடத்தி வருகின்றார்கள், தன் பாடுகள் ஒருநாள் முடிவடையும், தன் பிரயாசத்தின் பலன் தனக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு அந்த ஊழியனும், அவனுடைய குடும்பத்தாரும் உண்மையும் உத்தமமுமாய் பல ஆண்டுகள் பிரயாசப்பட்டுவந்தார்கள். ஆனால், இந்த உலகத்திலே நீதியை நடப்பிக்க வேண்டும் என்றால், துன்பங்களை தவிர்க்க முடியாது என்ற என்ற சத்தியத்தை நன்றாக அறிந்து கொண்டான். ஆனாலும், தன் எஜமானனுக்கு விசுவாசமுள்ளவனாக இருக்க தீர்மானம் செய்து கொண்டான். அநேக ஆண்டுகளுக்கு பின்னர், ஒரு நாள் அவனுடைய எஜமானனானவன் எதிர் பாராத நேரத்திலே திரும்பி வந்த போது, உண்மையும் உத்தமுள்ள அந்த ஊழியனை தன்னோடு பங்கடையும்படி சேர்த்துக் கொண்டார். அநீதியை நடப்பித்து, சுகபோகமாக, தங்கள் சுய விருப்பங்களை நிறைவேற்றியவர்கள் அதற்குரிய பாதகமான விளைவை பெற்றுக் கொண்டார்கள். நீங்கள் உங்கள் எஜமானனாகிய இயேசுவுக்கு விசுவாசமுள்ளவர்களாக வாழ்கின்றீர்களா?

**மத்தேயு 5:11**

**என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்;**

**ஜெபம்**: என்னைப் பாக்கியம் பெற்றவானாக மாற்றிய தேவனே, இந்த உலகத்தின் பாடுகளின் மத்தியிலே உம்முடைய நீதியை என் வாழ்விலே நிறைவேற்றி முடிக்க எனக்கு பெலன் தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# சோதனைகளின் முடிவு

**எபேசியர் 6:10**

**கடைசியாக, என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்.**

வாழ்க்கையிலே நெருக்கடியான சூழ்நிலைகள் தொடர்ந்து ஒன்றின் பின் ஒன்றாக அலையலையாய் வருவதினால், சில விசுவாசிகள், தங்கள் நெருக்கத்தின் மத்தியிலே, "நான் கர்த்தரை அறிந்து இத்தனை ஆண்டுகள் ஆகிவிட்டதே, ஆனால் வாழ்விலே சோதனைகளுக்கு முடிவில்லையா?" என்று இந்த உலகிலே உயிரோடு வாழும் நாட்களிலே சோதனைகளுக்கு முடிவு நாளை தேடுகின்றார்கள். சிலர் இப்படியாக தங்கள் வாயினாலே இதை அறிக்கை செய்யாவிடினும், அவர்கள் மனதிலே இவ்விதமான சிந்தித்துக் கொள்கின்றார்கள். நாம் கோணலும் மாறுபாடான சந்ததியின் நடுவே, வேற பிரிக்கப்பட்ட வாழ்க்கை வாழ்ந்து வருகின்றோம். கிறிஸ்துவை பற்றும் நாம் அனுபவ சாட்சியை பகிர்ந்து கொள்ளும் போது, இந்த உலக மனிதர்களின் பரிகாசத்தை யாரால் நிறுத்திவிட முடியும்? இந்த உலகம் பொல்லாங்கனுக்குள் கிடக்கின்றது. கிறிஸ்துவை தரித்துக் கொண்டு வாழ்பவனுக்கு இந்த உலகிலே உபத்திரவங்கள் உண்டு. அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள். பொல்லாதவர்களும் எத்தர்களுமானவர்கள் மோசம்போக்குகிறவர்களாகவும், மோசம்போகிறவர்களாகவுமிருந்து மேன்மேலும் கேடுள் ளவர்களாவார்கள். நம்முடைய மாம்சம் விரும்புவதற்கு எதிரான காரி யங்கள் நமக்கு நேரிடும் போது, மனதிலே வேதனை உண்டாகின்றது. ஆனால், தேவனுக்கு பிரியமானதை செய்வதே நம்முடைய மன வாஞ்சையாக மாறும் போது, உபத்திரவத்தின் மத்தியிலும், மனதிலே பெரிதான சமாதானம் உண்டாகின்றது. அநியாயஞ்செய்கிறவன் இன்னும் அநியாயஞ்செய்யட்டும் அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும் ஆனால் நீதியின் பாதையில் வாழும் நாம், இன்னும் அதிகமாக தேவ நீதியிலும், பரிசுத்தத்திலும் வளர்ந்து பெருகுவோ மாக. இந்த உலகத்திலே சோதனைகளுக்கு முடிவில்லாமல் இருக்கலாம், அதைவிட தேவ கிருபையானது, நம்மேல் அனுதினமும் அதிகமதிமாக ஊற்றப்படுகின்றது. எனவே, திடன் கொள்ளுங்கள், உலகத்தை ஜெயித்தவர்கள் நம்முடைய பட்சத்தில் இருக்கின்றார். எல்லாவிதமான உபத்திரவங்கள், துன்பங்கள், வியாகுலங்கள், வேதனைகள் மத்தியிலும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள் ளுகிறவர்களாயிருக்கிறோமே. எனவே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பெலப்படுங்கள்.

**ஜெபம்:** மேன்மையான நித்திய வாழ்விற்காக என்னை அழைத்த தேவனே, நான் இந்த உலகத்தில் உண்டாகும் உபத்திரவங்களை கண்டு சோர்ந்து போகாதபடிக்கு உம்மைப் பற்றிக் கொண்டு வாழ எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# மனதின் வாஞ்சைகள்

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த விதவையான தாயானவள், தன் பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கை செழிப்பாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், தனக்குண்டான கஷ்டங்களை பொருட்படுத்தாமல், கடுமையாக உழைத்து வந்தாள். அவள் வசித்த வந்த ஊரில் வாழ்ந்த மக்களில் சிலர், அவளை பரியாசம் பண்ணினார்கள். வேலை செய்யும் இடங்களிலே பல நிந்தைகள் உண்டாயிற்று. அந்த வேளைகளிலே, தன் பிள்ளைகளை குறித்த சிந்தையும், வாஞ்சையும் அவள் இருதயத்தில் நிறைந்திருந்ததினால், எந்த ஏளனங்களும், பரியாசங்களும், நிந்தைகளும், கஷ்டங்களும், அவள் இருதயத்தில் குடி கொள்ள இடம் இல்லாதிருந்தது. தன் பிள்ளைகள் பாதுகாப்பான கூரையின் கீழ் வாழ்ந்து, பட்டினியிருக்காமல் வேளைக்கு உணவு உண்டு, உடுத்துவதற்கு தகுந்த உடைகளை உடுத்தி, பாடசாலைக்கு சென்று படித்து வருவதை கண்டு அவள் மிகவும் திருப்தியடைந்தாள். அவளுடைய பாடுகள் மத்தியிலும், மனதிலே பெரிதான சந்தோஷம் நிலை கொண்டிருந்தது. ஆம் பரிசுத்த வாழ்வு வாழும்படிக்கும், நித்திய ஜீவனை சுதந்தரித்து, பரமனோடு நீடூழி வாழும்படிக்கும் மகத்துவமுள்ள அழைப்பை பெற்ற பிரியமான சகோதர சகோதரிகளே, அந்த விதவையான தாயானவள் சந்தித்தது போல, நமக்கும் இந்த உலகத்திலே பாடுகள் உண்டு. பாடுகள் மத்தியிலே நம்முடைய இருதயத்தில் இருக்கும் வாஞ்சையும் விருப்பமும் என்ன என்பதை ஆராய்ந்து அறிந்து கொள்ள வேண்டும். பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றவதே நம்முடைய இருதயத்தின் வாஞ்சையும் மகிழ்ச்சியுமாக இருந்தால், அவருடைய சித்தத்தை நிறைவேற்றும் வழியிலே உண்டாகும் பாடுகளும், துன்பங்களும், நமக்குள் இருக்கும் திவ்விய சமாதானத்தை கலைத்துப் போட முடியாது. நாம் நமக்கு பிடித்த சுவையான உணவை உண்ணும் போது, பசியை ஆற்றுவது மட்டுமல்லாமல், அந்த உணவினாலே திருப்தியடைகின்றோம். நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது என்று ஆண்டவராகிய இயேசு கூறினார். அதனால் பிதாவின் சித்தம் செய்வது அவருக்கு சந்தோஷமாக இருந்தது. உங்களுடைய மன வாஞ்சை என்ன? உங்களை திருப்திபடுத்தும் போஜனம் என்ன?

**யோவான் 4:34**

**இயேசு அவர்களை நோக்கி: நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது**

**ஜெபம்:** மனக்க கண்களை தெளிவு படுத்தும் தேவனே, நான் எப்போதும் உம்முடைய திருச் சித்தத்தை செய்வதிலே திருப்தியடைகின்றவனாக வாழ எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து நடத்திச் செல்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நடைமுறை பரீட்சைகள்

ஒரு பெற்றோரானவர்கள் தங்கள் மகனானவனை சின்ன வயதிலிருந்தே நல் வழியிலே நடத்தி வந்தார்கள். அவன் பாடசாலையிலே கல்வி கற்கும் நாட்களிலும், மேற்படிப்புக்காக பல்கலைகழகத்திலே படித்த நாட்களிலும், எல்லா பரீட்சைகளிலும் அவன் அதிக புள்ளிகளுடன் விசேஷட சித்திகளை பெற்றுக் கொண்டான். பட்டப்படிப்புக்களை முடித்த பின்பு, அவன் எல்லாக் காரியங்களிலும் அறிவுள்ளவனாக இருந்தான். பெற்றோர்களானாலும், அவனுடைய பட்டானார், பாட்டியோ எந்தக் காரியத்தைக் குறித்து அவனுக்கு அறிவுரை கூறினாலும், அதற்கு தகுந்த பதில்களை கொடுக்கும் அளவிற்கு அவனுடைய புத்தக அறிவும் அதிகமாகயிருந்தது. அதனால், அவன் தன் வாழ்விலே பரீட்சைகள் முடிந்துவடைந்து விட்டது. என் பெற்றோர் போலல்லாது, எல்லா விடயங்களையம் நான் இலகுவாக தீர்த்துக் கொள்வேன். நான் எல்லாம் அறிந்தவன் என்ற எண்ணமுடையவனாக இருந்து வந்தான். அவனுக்கு அநேக விடயங்களிலே புத்தக அறிவு இருந்தது உண்மை, ஆனால், தன் வாழ்வின் நடைமுறை (Practical Tests) பரீட்சைகள் இருக்கின்றது என்பதை அவன் சற்றும் உணராதிருந்தான். வாழ்க்கையின் சூழ்நிலைகளை அவன் தனியாக முகங் கொடுக்க வேண்டிய நாட்கள் வந்த போது, தன் புத்தக அறிவினாலே அதிக பயன் இல்லை என்பதையும், மனித வாழ்விலே பரீட்சைகளுக்கு முடிவில்லை என்பதையும் தானாகவே உணர ஆரம்பித்தான். பிரியமான சகோதர சகோதரிகளே, இது வாலிபருக்குரிய தியானம் மட்டுமல்ல. இது யாவருக்கும் உரிய தியானம். நாம் ஏன் பரிசுத்த வேதாகமத்தை வாசித்து, தியானிக்கின்றோம்? நாம் தேவனுடைய வாக்குத்தங்களை காலையிலும் மாலையிலும் அறிக்கை செய்துவிட்டு, பின்பு வீட்டிலும், கல்வி நிலையங்களிலும், வேலையிலும், சபையிலும், வெளி இடங்களிலும் நமக்கு ஏற்படும் சூழ்நிலைகளை நம்முடைய அறிவுக்கும் உணர்வுக்கும் ஏற்றபடி தீர்த்து வைப்பதற்காகவா? இல்லை! நாம் கற்றுக் கொண்ட வேத வார்த்தைகளினால், நம் அனுதின வாழ்வின் நடைமுறை பரீட்சைகளை மேற்கொள்ள நம்மை நாமே பயிற்சிவிப்பதற்காகவே. வேத வார்த்தைகளை கற்பது அவசியம் ஆனால் அவை களால் நாம் எச்சரிக்கப்படும் போது, நாம் அவைகளைக் கைக் கொண்டால் அவைகளினால் நமக்கு மிகுந்த பலன் உண்டு.

**சங்கீதம் 119:100**

**உம்முடைய கட்டளைகளை நான் கைக்கொண்டிருக்கிறபடியால், முதியோர்களைப்பார்க்கிலும் ஞானமுள்ளவனாயிருக்கிறேன்.**

**ஜெபம்:** என் கால்களுக்கு தீபமும் பதைக்கு வெளிசமுமான ஜீவ வார்த்தைகளை எனக்கு தந்த தேவனே, நான் அந்த வார்த்தையின் வெளிச்சத்திலே நடக்க எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# வறுமையும் செழிப்பும்

இந்த உலகத்தின் போக்கில் வாழ்பவர்களை பாருங்கள், “மரணபரியந்தம் அவர்களுக்கு இடுக்கண்களில்லை. அவர்களுடைய பெலன் உறுதியாயிருக்கிறது. இவர்கள் என்றும் சுகஜீவிகளாயிருந்து, ஆஸ்தியைப் பெருகப்பண்ணுகிறார்கள்.” நாமோ, எவ்வளவாய் நல் வழியிலே நடந்தாலும், எவ்வளவாய் கஷ்டங்களை சகித்து கொள்ள வேண்டியிருக்கின்றது என ஒரு விசுவாசியானவன், தன் பெலவீனத்திலே, தனக்குள் நொந்து கொண்டான். பரிசுத்த வேதாகமத்திலே காணப்படும் பரிசுத்தவான்களில் சிலர், தங்கள் வாழ்வில் ஒரு கட்டத்திலே இப்படியாக பேசிக் கொண்டார்கள். அப்படி பேசியவர்கள், தேவனை அறிகின்ற அறிவிலே வளரும் போது, தாங்கள் காரிய மறியாத மூடர்களைப் போல தவறாக பேசிக் கொண்டோம் என்று மனம் வருந்திக் கொண் டார்கள். இன்றும் சில விசுவாசிகள், தேவனுடைய வழி கடினமானது, நாங்கள் இந்த உலக போக்கிலே வாழும் மனிதர்களைப் போல வாழ்ந்துவிட்டால் பிரச்சனை இல்லை என்றே சில வேளை களிலே எண்ணிக் கொள்கின்றார்கள். பொருளாதார நிலைமையே இவற்றிற்கெல்லாம் முக்கிய காரணிகளிளொன்றாக காணப்படுகின்றது. விசுவாசிகளின் வாழ்விலே பொருளாதார நெருக்கடி தலைதூக்கும் போது, அவர்களுக்கு உண்டாகும் நெருக்கத்தினாலே, இந்த உலகிலே தங்களுக்கு உண்டாகும் கஷ்டங்களைக் குறித்து மனம் சொந்து கொள்கின்றார்கள். பொருளாதார நெருக்கடி மறைந்து, தங்கள் வாழ்வில் செழிப்பு உண்டானால், பிரச்சனைகள் இன்றி, மனமகிழ்சியுடன் வாழலாம் என்று சில விசுவாசிகள் எண்ணிக் கொள்கின்றார்கள். வேறு சிலர், உலகத்தின் செல்வம் பெருகினால் அது தேவனுடைய ஆசீர்வாதம் என்று கூறிக்கொள்கின்றார்கள். ஒருவேளை அவர்கள் கூறுவதுபோல, அவர்களுடைய வாழ்க்கையிலே அந்தக் காரியம் உண்மையாக இருந்தாலும், அவர்களுக்கு இந்த உலகத்திலே பிரச்சனைகள் முடிந்து விட்டது என்பது பொருள் அல்ல. பொருளாதார நெருக்கடியினால் வாடுவதினாலும், பொருளாதார செழிப்பிலே சுகித்திருப்பதினாலும், ஒருவன் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ள முடியாது. உயர்விலும் தாழ்விலும் பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை செய்ய தங்களை ஒப்புக் கொடுக்கின்ற வர்களே தேவ ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்கின்றார்கள். எனவே நாம் நம்முடைய விசுவாச அறிக்கையிலே உறுதியாய் இருப்போமாக.

**பிலிப்பியர் 4:11**

**நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன்.**

**ஜெபம்:** பரலோக தேவனே, என் பெலவீன நாட்களிலே, என் கால்கள் தடுமாறும் போது, நான் விசுவாசத்திற்கு விரோதமான காரியங்களை அறிக்கை செய்யாதபடிக்கு, விசுவாசத்திலே உறுதியாய் நிலைத்திருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# இன்று இப்போது செய்யப்பட வேண்டியவைகள்

"பிறக்க ஒரு காலமுண்டு, இறக்க ஒரு காலமுண்டு. நட ஒரு காலமுண்டு, நட்டதைப் பிடுங்க ஒரு காலமுண்டு." என்று பிரசங்கி ஒவ்வொன்றிற்கும் ஒரு காலமுண்டு என்று விவரித்து கூறியிருக்கின்றார். ஒரு விவசாயியானவன், நிலத்தைப் பண்படுத்தி, விதை விதைக்கின்ற நாட்களிலே, தற்காலத்திற்குரிய வேலைகளிலும், சவால்களை மேற்கொள்வதிலும் அதிக கவனமுள்ளவனாக இருப்பான். விதைவிதைத்த பின், சில கிழமைகளுக்கு பின் பயிர்கள் வளர்ந்து வரும்போது அதை பராமரிக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தாலும், விதைக்கின்ற நாட்களிலே, விதைப்பை குறித்தே சிந்தையுள்ளவனாக இருப்பான். அதுபோல, அறுக்கின்ற நாட்கள் வரும் என்று அவனுக்கு தெரிந்தாலும், அந்த நாட்களுக்குரிய வேலைகளை இப்போதே சிந்தித்து அதிக பாரமடையாமல், தற்போதுள்ள வேலைகளை சீராக செய்து முடிப்பதிலேயே கவனமுள்ளவனாக இருப்பான். இன்று மனிதர்கள், தங்கள் பிள்ளைகள் குழந்தைகளாக இருக்கும் போதே அவர்களுடைய எதிர்காலத்தைக்குறித்தும் அதிகமதகமாய் கவலையடைகின்றார்கள். அதன்பொருட்டு, ஓடி ஓடி அயராது உழைத்து சேமிக்க ஆரம்பிக்கின்றார்கள். அதனால், தங்கள் பிள்ளைகளை சிறு வயதிலே நடக்க வேண்டிய வழியிலே நடத்த தவறி விடுகின்றார்கள். அதன் விளைவாக பிள்ளைகள் சிறு வயத்திலே எதை கற்றுக் கொள்ளுகின்றார்களோ, அவர்கள் முதிர்வயதிலும் அவ்வழியையே பற்றிக் கொள்கின்றார்கள். (நீதி 22:6). ஒருவன் பாடசாலை நாட்களிலே கல்வி கற்காமல் வேறு அலுவலாக இருந்ததினால், குடும்ப வாழ்க்கையை ஆரம்பித்த பின்பு, பல நெருக்கடி களை எதிர் நோக்கினான். அவன் தன் வேலை செய்யும் நேரத்திலே, வேலையில் கவனம் செலுத்தாமல், நான் பாடசாலையில் கற்ற தவறிவிட்டேன் என்று தன் கவலையை மறக்க மதுபானம் அருந்த ஆரம்பித்தான். அதனால், நாளடைவிலே வேலையை இழந்து போனான். பிரியமானவர்களே, "நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள் நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்." என்று நம்முடைய ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார். எனவே அவருடைய பலத்த கரங்களுக்குள்ளே அடங்கியிருங்கள்.

**பிரசங்கி 3:1**

ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு; வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொரு சமயமுண்டு.

**ஜெபம்:** என்னை இரட்சித்த தேவனே, நான் கடந்த காலத்தையும், எதிர் காலத்தையும் சிந்தித்து துக்கித்து கொண்டிராமல், நிகழ்காலத்திலே செய்ய வேண்டியவைகளை உம் சித்தப்படி செய்து முடிக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# எக்காலமும் மாறாதவர்

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த குடும்பத்தினர், எதிர்பாராதவிதமாக பெரும் பொருளாராதர நெருக்கடியை சந்தித்தார்கள். அடுத்த வேளை தங்கள் பிள்ளைகளுக்கு எதை உண்ணக் கொடுப்போம் என்ற அளவிற்கு சூழ் நிலைகளை மோசமாக இருந்ததால், அவர்கள் தங்கள் வாழ்விலே முன் னொருபோதும் எதிர்நோக்காத சோதனைக்கு முகங்கொடுக்க வேண்டி யிருந்தது. அவரகளுடைய சின்ன மகளானவள் சிறு பிள்ளையாக இரு ந்ததால், அவளுடைய பெற்றோ ரின் நெருக்கடியான நிலைமையை அறிந்து கொள்வதற்குரிய அறிவோ அல்லது அவர்களுக்கு உதவுவத ற்குரிய பெலமோ அவளிடம் இல்லை. அவள் வழமைபோல தன் பாடசாலையில் கொடுக்கப்பட்ட வீட்டு வேலைகளை செய்வதிலும், அதன் பின்னர் அயலிலுள்ள சிறு பிள்ளைகளோடு விளையாடுவதி லும் நோக்கமுள்ளவளாக இருந் தாள். அவர்களுடைய மூத்த மகனானவன் வாலிப பிரயாசத்திலிரு ந்ததால், அவன் பெற்றோரின் பாடுகளை அறிந்திருந்தான். ஆனால், அவனால் ஏதும் பெரிதாக செய்ய முடியவில்லை. இது பெற்றோரின் திட்டமிடாத வாழ்வின் தவறு, அவர்கள் இதை பார்த்துக் கொள்ள வேண்டும் என்று தனக்குள்ளே சிந்தித்துக் கொண்டவனாக, தன் நண்பர்களை சந்திக்க சென்று விட்டான். இப்படியாக மனிதர்களுடைய வாழ்விலே ஒவ்வொரு காலத்திற்குரிய அறிவும், சிந்தனையும், சவா ல்களும் வேறுபட்டதாகவே காணப்படுகின்றது. அந்தப் பெற்றோரின் பிள்ளைகள், வளர்ந்து தங்கள் சொந்த குடும்பங்களை விசாரிக்கின்ற நாட்களிலே, அவர்கள் பெற்றோர் கடந்து சென்ற சவால்களை ஒரு அள விற்கு புரிந்து கொள்வார்கள். ஆனால், இது வாழையடி வாழையாக செல்லும் வாழ்க்கை வட்டமாகவே கடந்து செல்கின்றது. "ஒரு சந்ததி போகிறது, மறு சந்ததி வருகிறது. பூமியோ என்றைக்கும் நிலைத்திரு க்கிறது. சூரியன் உதிக்கிறது, சூரியன் அஸ்தமிக்கிறது. தான் உதித்த இடத்திற்கே அது திரும்பவும் தீவிரிக்கிறது." (பிரசங்கி 1:4-5)ஆனால் நம்முடைய தேவனோ, எக்காலமும் மாறதவராக இருக்கின்றார். அவரே நம்முடைய அசையாத நம்பிக்கை. அவர் சமுகத்தில் உங்கள் இரு தயத்தை ஊற்றிவிடுங்கள். அவரே நமக்கு அடைக்கலமாயிருக்கிறார்."

**சங்கீதம் 62:8**

ஜனங்களே, எக்காலத்திலும் அவரை நம்புங்கள்; அவர் சமுகத்தில் உங்கள் இருதத்தை ஊற்றிவிடுங்கள்; தேவன் நமக்கு அடைக்கல மாயிருக்கிறார்.

**ஜெபம்**: எக்காலமும் மாறாத தேவனே, நான் என் வாழ்வின் நோக்கத்தை மறந்து போய்விடாமல், உமக்கு பயந்து, ஞானமுள்ளவனாய் நடந்து கொள்ளும்படிக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# "எதிர்காலம்"

ஒரு ஊரிலே பொருளாதார நெருக்கடியினால் உண்டான வேலை யில்லா பிரச்சனையினாலே, அந்த ஊரிலுள்ள பெரும்பான்மையான ஜனங்கள் பாதிக்கப்பட்டார்கள். அந்த ஊரிலே திருப்பதியாக வாழ்ந்து வந்த குறிப்பிட்ட குடும்பத்தினருடைய பொருளாதர நிலைமை மிகவும் மோசமடைந்ததால், பிள்ளைகளுடைய எதிர்கால நலனைக் கருதி, தூரத்திலுள்ள செழிப்பான ஊரொன்றுக்கு சென்று குடியேறினார்கள். அவர்கள் வாழ்விலிருந்த பொரு ளாதர நெருக்கடியான நிலைமை யானது சில மாதங்களுக்குள்ளே நிவ ரித்தியானது. ஒரு குடும்பமாக சிறு பிள்ளைகளோடு வாழ்க்கையானது சந்தோஷமாக போய் கொண்டிருந் தது. பிள்ளைகள் வளர்ந்து வாலிப நாட்களை அடைந்த போது, புதிய ஊரிலுள்ள நாட்டின் நடப்பையும், நாகரீகத்தையும் பிள்ளைகள் தவிழுக் கொண்டார்கள். அது மட்டுமல்ல, அந்த தேசத்திலுள்ள வாலிபர்களுக்கு இருந்த சுதந்திரத்தினால், குடும்ப வாழ்க்கைக்கு ஏற்புடையதல்லாத சில தவறான வழிகளை பற்றிக் கொண்டதால், பெற்றோர்கள் மிகவும் மன வேதனை அடைந்தார்கள். அவர்கள் தாங்கள் விட்டு வந்த ஊரிலேயே வாழ்ந்திருக்கலாம் என் றும் தங்களுக்குள்ளே பேசிக் கொண்டார்கள். அவர்கள் வாழ்ந்து வந்த ஊரிலே கஷ்டங்கள் உண்டானதால், வாழ்வாதாரத்திற்காக வேறு வழிய களை தேடுவது நியாயமானது. ஆனால், அந்த வழியிலே அவர்கள் எதிர்பார்க்கும் முடிவு உண்டாகுமோ என்பதை அவரவர் சிந்தித்து பார்க்க வேண்டும். பிள்ளைகளுடைய எதிர்கால நலனுக்காக, ஊரில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியிலிருந்து விடுதலையடைய வேண் டும் என்ற நோக்கம் நிறைவேறியது. ஆனால், பிள்ளைகளுடைய எதிர் காலமோ அவர்கள் நினைத்த பிரகாரமாக அமையாமல் போயிற்று. மனிதர்களுக்கு செம்மையாக தோன்றும் வழிகள் எல்லாம் தேவனு டைய வழிகள் அல்லவே. பொருளாதார மலர்ச்சி சம காலத்திலே மன மலர்ச்சியை உண்டாக்கலாம் ஆனால், அந்த மன மலர்சியானது நீடித்திருப்பதும் இல்லை, அதை அடைந்தவருக்கு மனநிறைவை கொடு ப்பதுமில்லை. எனவே, தீர்மானங்களை எடுக்கு முன் கர்த்தருக்காக காத்திருங்கள். நீங்கள் எங்கு சென்றாலும், எந்த நிலையிலும் தேவ ஆலோசனையின் வழியிலே நடந்து கொள்ளுங்கள்.

**சங்கீதம் 32:8**

**நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழி யை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோ சனை சொல்லுவேன்.**

**ஜெபம்:** என்னை பெயர் சொல்லி அழைத்த தேவனே, என் வாழ்வில் என்னுடைய சுய வைராக்கியத்தின்படி கிரியைகளை நடப்பிக்காமல், உம்முடைய சித்தத்தின்படி நான் வாழ என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

வியாழன் | மே 9

📖 மாலை வாசகம் – சங்கீதம் 62:9–10

# வறுமையின் விளைவுகள்

ஒரு மனிதனுடைய வாழ்விலே உண்டான வறுமை அவனை மிகவும் நெருக்கியது. தன் குடும்பம் படும் கஷ்டத்தை அனுதினமும் கண்ட தினாலே அவன் மனம் விரக்தியடைந்தது. தேவ பகத்தியை பற்றி சிலர் பேசும்போது அவன் மனமோ கசப்பால் நிறைந்திருந்தது. நிலைமை அவனுக்கு சாத்தியமற்றதாக இருந்ததினால், அநியாயமான வழியிலே உழைத்து வரும் தன் பழைய நண்பர்களோடு சேர்ந்து கொள்ளும்படி தன் மனதிலே தீர்மானம் செய்து கொண்டான். வறுமையானது அவ னுக்கு கொடுமையாக இருந்ததால், அவன் திருடிக் கொண்டாலும் என்ன என்ற மனநி லையுடையவனானான். பிரியமான சகோதர சகோதரிகளே, ஐசுவரியம் கண்ணியை வரவிக்கும் என்றும் ஏழ்மையானது பரிசுத்த த்தை உண்டு பண்ணும் என்றும் சிலர் பொருளாதார அளவகோலால் பரிசுத்த்தையும் அநியாயத்தை வகை யறுத்துக் கொள்கின்றார்கள். இந்த உலகிலே ஐசுவரியவான்கள் மாத் திரம் துன்மார்க்கமான வழிகளிலும், வறியவர்களும் யாவரும் சன்மார்க மான வழிகளிலும் வாழ்கின்றார்களா? அல்லது எண் ணங் கொண்ட வர்களாக இருக்கின்றார்களா? வறியவர்கள் மறக்கப்ப டுவதில்லை ஐசு வரியவான்கள் மாத்திரம் சன்மார்க்கமான வழிகளிலும், வறியவர்களும் யாவரும் துன்மார்கமான வழிகளிலும் வாழ்கின்றார்களா? பொருளா தார ஏற்றத்தாழ்வு துன்மார்க்கத்தையும் சன்மார்க்கத்தையும் வகையறு ப்பதில்லை. ஒரு மனிதனானவன், எந்த நிலைமை யிலே இருந்தாலும், தனக்குண்டான பெலத்தினாலும் பரிசுத்தத்தமடைய முடியாது, பரிசுத்த வாழ்விற்கு தேவ பெலன் தேவை என்று தன்னை தாழ்த்தும் எளிய மனமுடையவனாக இருந்தால், அவன் தேவன் பெயரில் கொண்டுள்ள நம்பிக்கையானது வீண்போவதில்லை. பண ஆசையானது எல்லா தீமை க்கும் வேராக இருக்கின்றது. வறுமையானது மனிதர்களை அநியா யமான வழிகளுக்கு தள்ளிப்போடும். ஆனால், உயர்விலும், தாழ்வி லும், சோதனையிலும், வேதனையிலும் தேவனையே தன் நம்பிக்கை யாக பற்றிக் கொண்டு வாழ்கின்ற மனுஷன், தேவனுக்கு பிரியனும், ஆசீர்வதிக்கப்பட்டவனுமாக இருக்கின்றான்.

**நீதிமொழிகள் 30:9**

நான் பரிபூரணம் அடைகிற தினால் மறுதலித்து, கர்த் தர் யார் என்று சொல்லா தபடிக்கும்; தரித்திரப்படுகிற தினால் திருடி, என்தேவனு டைய நாமத்தை வீணிலே வழங்காதபடிக்கும், என் படி யை எனக்கு அளந்து என் னைப் போஷித்தருளும்

**ஜெபம்**: வறட்சியான காலத்திலும் கனி கொடுக்கும்படி என்னை ஏற்ப டுத்திய தேவனே, நான் உலகத்தின் பொருளாதார நிலைமையை பற்றிக் கொள்ளாமல், உம்மை பற்றி கொண்டு வாழ கிருபை செய்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தேவனை சார்ந்து வாழுங்கள்

செல்வ, செழிப்போடும், பெயர், புகழுடன் வாழும் ஐசுவரியவானின் தேவ பக்தி எதினால் சோதித்தறியப்படும்? ஐசுவரியத்தோடு வாழும் விசுவாசியானவர்களின் பொருளாதார நிலைமை பெரும் வீழ்சியைக் காணும் போது, அவர்களில் எல்லோரும் தேவனை தூஷித்து அவ ரைவிட்டு விலகும் இதயம் உடையவர்கள் அல்ல. யோபு என்ற பக்தன், ஐசுவரியமுள்ளவனும், கிழக்கத்திப் புத்திரர் எல்லாரிலும் பெரிய வனாயிருந்தான். தேவனுடைய பாதுகாப்பின் வேலி யோபுவை சுற்றியிருக்கின்றது, அத்தோடு தேவன் அவன் கைகளின் கிரி யையை ஆசீர்வதித்திருக்கின் றார். அதனால் அவனுடைய சம்பத்து தேசத்தில் பெருகிற்று. இதனிமித்தமே யோபு பக்தியள்ளவனாக இருக்கின்றான் என்று பிசா சானவன் குற்றப்படுதினான். நாட்கள் கடந்து சென்ற போது, யோபு தனக்குண்டான யாவற்றையும் இழந்து, உடல் முழுவதும் பருக்களும் புண்களும் நிறைந்தவனாய், ஆதரவற்றவனாக தள்ளப்பட்டான். ஆனால், அவன் தன் தாழ்மையிலே தேவனை தூஷியாமல், தேவன்மேல் கொண்டுள்ள விசுவாசத்திலே முடிவு பரியந்தமும் உறுதியாக தரித்தி ருந்தான். யோபுவைப் போன்ற சில தேவ பக்தியுள்ள ஐசுவரியவான்கள் இந்த உலகத்திலே இருக்கின்றார்கள். அவர்கள் தங்கள் நிறைவிலும், குறைவிலும், உயர்விலும், தாழ்விலும் பிதாவாகிய தேவனுடைய சித்த த்தை தங்கள் வாழ்விலே நிறைவேற்றி முடிக்க ஆயத்தமுள்ளவர்க ளாகவே இருக்கின்றார்கள். வேறு சில ஐசுவரியவான்கள், யோபுவின் மனைவியைப் போல, செழிப்பு நிறைந்த உயர்வான நாட்களிலே பக்தியுள்ளவர்கள் போல காட்சியளிக்கின்றார்கள். ஆனால், வறுமை அவர்கள் விசுவாசத்தை சோதிக்கும். அவ்வண்ணமாக குறைவு ஏற்படும் போது, அப்படிப்பட்டவர்கள் தேவனை தூஷிக்கின்றவர்களாக மாறி விடுகின்றார்கள். இன்னும் சிலர், ஆண்டவர் இயேசுவிடம் வந்த ஐசவ ரியமுள்ள வாலிபனைப் போல, தேவ கற்பனைகளை கைகொள்ளு கின்ற போதிலும், இயேசுவை பின்பற்றும் அழைப்பைவிட தங்கள் ஐசுவரியத்தை விரும்புவதினால், துக்கத்தோடு போய்விடுகின்றார்கள். பிரியமானவர்களே, வசதியோடு வாழும் விசுவாசிகளின் விசுவாசத்தை அவர்கள் வாழ்வில் ஏற்படும் பொருளாதார வீழ்ச்சியானது சோதிக்கும். அப்படிப்பட்ட வேளையிலே உங்கள் விசுவாச அறிக்கையானது சொல் லிலும் செயலிலும் காண்பிக்கப்படும் பொருட்டு, நீங்கள் எப்போ தும் தேவனை சார்ந்து வாழுங்கள்.

**யோபு 1:21**

**கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் என்றான்.**

**ஜெபம்:** என் சகாயராகிய தேவனாகிய கர்த்தாவே, என் ஆத்துமா, எந்த சூழ்நிலையிலும், உம்மையே நோக்கி அமர்ந்திருக்கும் படிக்கு எனக்கு பிரகாமுள்ள மனக்கண்களை தந்து என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# விசுவாசத்திலே நிலைத்திருங்கள்

ஒரு ஊரிலே சிறு வியாபாமொன்றை செய்து வந்த விசுவாசியானவன், தன் குடும்பத்தின் அன்றன்றைய தேவைகள் சந்திக்கும் அளவிற்கு மட்டாக உழைத்து, எளிமையான வாழ்க்கை வாழ்ந்து வந்தான். சபையிலே நடை பெறும் எந்த ஆராதனைகளையும், ஜெப கூட்டங்கள், உபவாசங்கள், கன்வென்ஷன் நாட்கள் உட்டப எல்லா நிகழ்சிகளிலும் தவறமாக கலந்து கொண்டு, குடும்பமாக தேவ ஊழியத்தில் பங்கெடுத்து, மிகவும் ஆதரவாக இருந்து வந்தான். கல்வி, வேலை, உல்லாச பயணங்கள் என்று ஆராதனைகளை அசட்டை செய்யும் விசுவாசக் குடும்பங்களை கண்டிப்பதில் அவன் பின் நிற்பதில்லை. ஆண்டுகள் கடந்து சென்ற பின்பு, எதிர்பாராதவிதமாக அவன் வியாபாமானது வளர்ச்சியடைய ஆரம்பித்தது. அடுத்த ஊர்களிலும், பட்டணத்திலும் கிளைகளை ஆரம்பித்தான். அவனுக்கு புதிய செல்வாக்கு நிறைந்த நண்பர்கள் பெருகினார்கள். அவன் ஐசுவரியம் மிகுதியானதினால், ஊரிலே இருந்த சில பண்ணைகளையும் விலை கொடுத்து வாங்கினான். பிள்ளைகள் கல்வி தவிர்ந்த இதர விளையாட்டு கலைகளிலே முன்னேறும்படி அவர்களை சில கழங்களிலே பதிவு செய்தான். தன் புதிய நண்பர்களுக்கு ஈடு கொடுக்கும்படி, குடும்பமாக உல்லாசப் பயணங்களை மேற்கொண்டான். தாங்கள் சென்று வந்த சபைக் கட்டிடங்களை பெரிப்பித்து கட்டி, அதை நவீன மயப்படுத்துவதற்கு பண உதவி செய்தான். ஆனால், காலப் போக்கில், அவர்கள் ஞாயிறு ஆராதனைகளிலே பங்குபெற்றுவதே மிகவும் அருமையாக இருந்தது. தேவன் தங்கள் கையின் பிரயாசத்தை ஆசீர்வதித்தார் என்று கூறிக் கொள்வார்கள் ஆனால் அவர்கள் கனி யற்ற வாழ்க்கை வாழ்ந்து வந்தார்கள். ஆம் பிரியமானவர்களே, சில ஐசுவரியவான்களின் விசுவாசத்தை வறுமை சோதிப்பது போல, எளிமையான வாழ்க்கை வாழும் விசுவாசிகளின் விசுவாச வாழ்க்கையும் அவர்கள் வாழ்வில் ஏற்படும் பொருளாதார செழிப்பினால் வெளிப்படு த்தப்படும். ஐசுவரியமுள்ளவனாய், இரத்தாம்பரமும் விலையேறப் பெற்ற வஸ்திரமும் தரித்து, இயேசு இல்லாமல் சம்பிரமமாய் வாழ்ந்து பாதாளத்திற்கு செல்வதைவிட, இந்த உலகிலே வாழும் நாட்களிலே ஏழையாக இருந்து, பல கஷ்டங்களை அனுபவிக்க நேர்ந்தாலும் பரமன் இயேசுவோடு வாழ்ந்து, பரலோகத்திலே நீடுழியாய் வாழும் பாக்கியமே மேலானாது.

**சங்கீதம் 62:10**

**ஐசுவரியம் விருத்தியானால் இருதயத்தை அதின்மேல் வைக்காதேயுங்கள்.**

**ஜெபம்**: நித்திய ஜீவனுக்கென்று என்னை அழைத்த தேவனே, இந்த உலகத்திலே நான் பாடுகளை அனுபவிக்க நேர்ந்தாலும், உலக போக்கில் நான் சிக்கிக் கொள்ளாதபடிக்கு என்னை காத்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

ஞாயிறு | மே 12

📖 மாலை வாசகம் - சங்கீதம் 1:1 – 6

# நான் இருக்க வேண்டிய இடம்

மந்தையிலே இருந்த ஆட்டுக்குட்டியொன்று, பண்ணையின் அப்புறத்தி லுள்ள பன்றிக்குட்டியோடு சேர்ந்து விளையாடிக் கொண்டிருந்தது. அதை கண்ட தாய் ஆடானாது, தன் குட்டியைப் பார்த்து, எங்கள் எஜமானனானவன் எங்களுக்கென்று ஒரு தொழுவத்தை அமைத்து, வாசலை காத்து, குறித்த நேரத்திலே பசும்புல் மேய்ச்சலிலே நடத்தி, அமர்ந்த தண்ணீரண்டை எங்களை சேர்க்கின்றார். ஆனால், நீயோ எங் கள் எஜமானனானவன் எங்களுக்கு போட்ட எல்லையை மீறி, பன்றி களின் அழுக்கான பட்டியினருகே சென்று, அவைகளோடு விளை யாடி வருகின்றாய், இதனால் உன க்கு ஆபத்து ஏற்படும், நீ பலனற் றுப் போவாய் என்று எச்சரித்தது. அதற்கு மறுமொழியான அந்தக் குட் டியாடு தன் தாயாட்டை நோக்கி: அந் தப் பன்றிக்குட்டியை பாருங்கள், அது என்னை போல ஒரு குட்டி, அதனால் என்ன ஆபத்தது வரும் என்று கூறி, பன்றிகளின் பட்டியருகே போக்கும் வரத்துமாக இருந்தது. நாட்கள் கடந்து சென்றதும், ஆட்டுக் குட்டியும், பன்றிக் குட்டியும் வள ர்ந்து வந்தது. குறித்த காலத்திலே அந்த பன்றி, பன்றிகளைப் போல சேற்றிலே புரண்டு, பன்றியைப் போலவே இருந்து. அதனால், அந்த ஆடும், அந்தப் பன்றியைப் போலவே அழுக்கானதும் நாற்றமெடுக்கி ன்ற தாகவும் இருந்தது. பிரியமான சகோதர சகோதரிகளே, இப்படி ப்பட்ட கதைகளை வாசிக்கும் போது, சிலர் இது ஒரு சாத்தி யமற்ற கற்பனைக் கதை என்றும், இது நகைப்புக்குரியதென்றும் எண் ணிக் கொள்கின்றார்கள். ஒரு வேளை மிருகங்கள் மத்தியிலே இது சாத்திய மற்றதாக இருக்கலாம். ஆனால், உளையான சேற்றிலும், படுகுழியிலு மிருந்து, ஆண்டவராகிய இயேசுவின் விலைமதிக்கமுடியாத இரத்தத்தி னாலே பாவமறக் கழுவப்பட்டு, கன்மலையின் மேல் தூக்கி நிறுத்தப் பட்டவர்கள், மறுடியும், எஜமனானனாகிய இயேசு போட்ட பாதுகாப்பின் வேலியை தாண்டி, பாவ சேற்றை நாடி, இந்த உலகத்தின் போக் கிலே வாழ்பவர்களோடு மிகவும் ஐக்கியமுள்ளவர்களாக வாழ்ந்து வருகின் றார்கள். இந்த சம்பவமானது வெறும் கற்பனை கதையல்ல. இது நகைப்புக்குரியதுமல்ல. படுகுழியை மறுபடியும் வெட்கின்றவன் ஒரு நாள் அதற்குள்ளே மறுபடியும் விழுந்து விடுவான். கர்த்தர் போட்ட பாது காப்பின் வேலியை பிடுங்குகின்றவன், சர்ப்பத்தினால் தீண்டப்படுவான். எனவே, எச்சரிக்கையுள்ளவர்களாக இருங்கள்.

**பிரசங்கி 10:8**

**படுகுழியை வெட்டுகிறவன் அதிலே விழுவான்; அடை ப்பைப் பிடுங்குகிறவனைப் பாம்பு கடிக்கும்.**

**ஜெபம்**: பாவ சேற்றிலிருந்து என்னை தூக்கி எடுத்த என் தேவனே, நீர் எனக்கு போட்ட எல்லையை நான் மீறி நடப்பதற்கு துணிகரம் கொள்ளா தபடிக்கு எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# அரணும் கோட்டையும்

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த தேசிய பொலிஸ் அதிகாரியானவர், தன்னுடைய மகனானவனுக்கு சின்ன வயதிலிருந்து நல்ல புத்திமதிகளை கூறி வளர்த்து வந்தார். மகனானவன், வாலிப வயதையடைந்ததும், அவன் தன் நண்பர்களோடு சேர்ந்து, எங்கு செல்ல வேண்டும், எங்கு செல்லக் கூடாது என்ற தெளிவானதும் திட்டமானதுமான அறிவுரையை பல முறை கூறியிருந்தார். ஒரு நாள் அதிகாரியின் மகனானவன், தன் நண்பர்களோடு சேர்ந்து, தன் தகப்பனானவர் போக வேண்டாம் என்று கூறியிருந்த இடத்திற்கு போவதற்கு துணிகரம் கொண்டான். அங்கு சென்றதும், அந்த பகுதியிலே வாழ்ந்து வந்த துன்மார்க்கர்களும், வீணர்களும், அந்த வாலிபர்களை தாக்கி கொள்ளையடிக்கும்படிக்கு சூழ்ந்து கொண்டார்கள். அந்த வேளையிலே, பொலிஸ் அதிகாரியின் மகனானவன் அவர்களை நோக்கி: நான் யார் தெரியுமா? இன்னாருடைய மகன். எனவே, எச்சரிக்கையாயிருங்கள் என்று கூறினான். அதைக் கேட்ட அந்த துஷ்ட மனிதர்கள் மூர்க்கம் கொண்டு, நீ இன்னாருடைய மகனாக இருந்தால், நீ இங்கே வரக்கூடாது என்று உனக்கு யாரும் சொல்லி கொடுக்கவில்லையா என்று அவனை அதிகமாக அடித்து, குற்றுயிராக விட்டு சென்றார்கள். தன் மகனானவன் சுகமடைந்த பின்பு, அந்தப் பொலிஸ் அதிகாரியனாவர் அவனை நோக்கி: நீ ஏன் என் சொல்லை மீறி போகக்கூடாத இடத்திற்கு சென்றாய் என்று கடிந்து கொண்டார். அதற்கு அவன்: அப்பா, நீங்களும் அங்கே அடிக்கடி சென்று வருகின்றீர்கள், உங்களுடைய பாதுகாப்பு எனக்கும் இருக்கி ன்றது தானே என்றான். அதற்கு தகப்பனானவர்: மகனே, அது என்னு டைய சேவை. என்னுடைய வேலை. அதற்கென நான் பிரத்தியேகமாக பயிற்றுவிக்கப்பட்டிருக்கின்றேன். ஜனங்களை விடுதலையாக்கவும், சட்டத்தை நிலை நாட்டவும் நான் அங்கே சென்று வருகின்றேன். என்னுடைய பாதுகாப்பு உனக்கு எப்போதும் உண்டு. ஆனால், நீ நான் போட்ட பாதுகாப்பு வலையத்தை தாண்டிச் சென்றால் அதனால் உனக்கு ஆபத்து நேரிடும் என்று அறிவுரை கூறினார். பிரியமானவர்களே, தேவனாகிய கர்த்தரே நம்முடைய கோட்டையும் அரணுமாயிருக்கின்றார். எனவே அந்தக் கோட்டையை விட்டு விலகாமல், அதற்குள் நாம் தங்கியிருக்க பழகிக் கொள்ள வேண்டும். நாம் அவருடைய வார்த்தையின் வெளிச்சத்திலே வாழும் போது அவருடைய அரணுக்குள் தங்கி வாழ்கின்றவர்களாக எப்போதும் காணப்படுவோம்.

**சங்கீதம் 31:3**

**என் கன்மலையும் என் கோட்டையும் நீரே;**

**ஜெபம்**: சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனே, உம்முடைய பிள்ளையாகிய நான், உம்முடைய ஆலோசனைகளையும் எச்சரிப்பையும் அசட்டை பண்ணாமல் வாழ எனக்கு கிருபை செய்வீராக. இர ட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

| செவ்வாய் \| வைகாசி 14 | 🕮 மாலை வாசகம் – 1 பேதுரு 5:6 |
|---|---|

# நீ போகும் இடமெல்லாம்...

அப்பா உங்களுடைய பாதுகாப்பிற்குள் இருக்கச் சொல்கின்றீர்களே, அப்படியானால் நான் ஒரு இடமும் போக முடியாதா? ஒன்றுமே செய்ய கூடாதா? யாருடனும் பேச முடியாதா? என்று ஒரு மகனானவன், தன் தகப்பனானவரிடம் கேட்டுக் கொண்டான். அந்த மகனானவனைப் போல, விசுவாசிகளும் இத்தகைய கேள்விகளை கேட்டுக் கொள்வதை நீங்கள் கவனித்திருக்கலாம் அல்லது "இவர்கள் கூறுவதைப் பார்த்தால் நாங்கள் இந்த பூமியிலே வாழவே முடி யாது போல இருக்கின்றதே" என்ற சிந்தைகள் உங்கள் மனதிலே தோன் றியிருக்கலாம். தேவ னுடைய பல த்த கரத்திற்குள் அடங் கியிருப்ப தென்பதன் பொருள் என்ன? வேறு பிரிக்கப்பட்ட வாழ்க்கை என்பது என்ன? எப்போதும் தேவ ஆலயத் திலே வாசமாயிருப் பதா? வீடும், பாடசாலையும், வேலையும் என்று விசுவாசிகள் தங்கள் சுற்றுவட்டத்தை குறுகியதாக்கிக் கொள்வதா? இன் றைய உலகிலே, சிறுவர்கள், வாலிபர்கள், பெரியவர்கள், வயதானவ ர்கள் யாவரும், வீட்டிற்குள் இருந்து கொண்டே, தங்கள் கைத் தொலை பேசி சாதனத்தினால், உலகத்தை சுற்றி வருகின்றார்கள். ஏறத்தாழ தங்கள் ஆசை விருப்பங்கள் யாவையுமே இன்ரநெற் ஊடகங்கள் வழி யாக நடத்தி முடிகின்றார்கள். ஒருவன் தன் தகப்பனானவரின் பாது கா ப்பிற்குள் அடங்கியிருப்பதென்றால், அவன் வீட்டிலிருந்தாலும், வெளியி லிருக்க நேரிட்டாலும், தன் தகப்பனானவர் சொல்வதை கேட்டு, அவ ருடைய வார்த்தைக்கு கீழ்படிந்து, அதன்படி நடக்கின்றவனாக இருக்க வேண்டும். "நீ போகும் இடமெல்லாம் புத்திமானாய் நடந்து கொள்ளும் படிக்கு, கர்த்தருடைய வேதத்தைவிட்டு, வலது இடது புறம் விலகாதிரு ப்பாயாக. அவருடைய வார்த்தை உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்ப தாக. அவருடைய வார்த்தையை செய்ய கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக. அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், புத்திமானாயும் நடந்து கொள் ளுவாய்" என்று தேவனாகிய கர்த்தர் தன்னுடைய தாசனாகிய யோசு வாவுக்கு அறிவுரை கூறியிருக்கின்றார். நாமும் அவருடைய வார்த் தயை கேட்டு, அதை நம் வாழ்வில் கைக்கொள்ளும்போது, நாம் எங்கு செல்ல வேண்டி நேர்ந்தாலும், நாம் எப்பொழுதும் அவருடைய பலத்த கரத்திற்குள் அடங்கியிருப்பவர்களாக காணப்படுவோம்.

**யோசுவா 1:7**

நீ போகும் இடமெல்லாம் புத்திமானாய் நடந்துகொள்ளும்படிக்கு, அதை விட்டு வலது இடதுபுறம் விலகாதிருப்பாயாக.

**ஜெபம்**: உலகத்தின் முடிவு பரியந்தம் உங்களோடிருக்கின்றேன் என்ற சொன்ன தேவனே, நான் எங்கு செல்ல நேர்ந்தாலும், உம்முடைய வார்த்தையின் வெளிச்சத்திலே வாழ எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

📖 மாலை வாசகம் – சகரியா 2:5,8

# தேவ பாதுகாப்புக்குரியவர்கள் யார்?

"உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார். உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உன்னைத் தங்கள் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள்" (சங்கீதம் 91:11-12). இந்த வார்த்தைகள் இவ்வுலக கவியரசுகளால் எழுத்தப்பட்ட உண்வுகளை தூண்டிவிடும் வெறும் அடுக்கு மொழிகளா? இல்லை! இவை தேவ ஆவியினால் அருளப்பட்ட ஜீவ வார்த்தைகள். எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன் தம் வாக்கில் உண்மையுள்ளவராக இருக்கின்றார். (எபிரெயர் 6:18). யார் இந்த சிலாக்கியத்தை பெற்றவர்கள்? இந்த பாக்கியத்தை பெற்றுக் கொள்வதற்குரிய தகைமைகள் என்ன? "திரண்ட ஆஸ்தி, உயர்ந்த கல்வி, மிகையான செல்வாக்குகள்" போன்றவற்றால் தேவ பாதுகாப்பை பெற்றுக் கொள்ள முடிமோ? உலக மேன்மைளாகல் உன்னதமானவற்றை பெற்றுக் கொள்ள முடியாது. பாவிகளும், அநியாயம் செய்கின்றவர்களும், துன்மார்கத்தில் வாழ்கின்றவர்களும், ஆண்டவர் இயேசுவை அறியாமல் கோபாக்கினையின் பிள்ளைகளாக வாழ்கின்றவர்கள் இதை பெற்றுக் கொள்ள முடியாதா? இந்த மேன்மையான பாதுகாப்பை யாவரும் பெற்றுக் கொள்ளும்படி, பிதாவாகிய தேவன் தாமே, தம்முடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை இந்த உலகத்திற்கு அனுப்பினார். அவரை விசுவாசித்து, அவர் காட்டிய வழியிலே வாழ தன்னை ஒப்புக் கொடுக்கும் மனிதர்கள் யாவரும். நமக்கு அடைக்கலமாயிருக்கின்ற உன்னதமான கர்த்தரை தாபராமாக்கிக் கொள்கின்றார்கள். அப்படி அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர் களோ, அத்தனைபேர்களும், அவர்களுடைய பழைக வாழ்க்கையானது எப்படிப்பட்டதாக இருந்தலும், அவர்கள் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார். அப்படியாக தேவ பிள்ளைகளாக்ப்பட்டவர்கள் இனி பாவிகளும், அநியாயக்காரர்களும், துன்மார்கர்களும், பறிகாரர்களும் என்று அழைக்கப்படுவதில்லை. அவர்களை தம்முடைய பிள்ளைகள் என்று கூறுவதற்கு பிதாவாகிய தேவன் வெட்கப்படுவதுமில்லை. இவர்கள் உன்னதமான தேவனின் மறைவிலிருக்கின்றர்கள். சர்வ வல்லமையுள்ள தேவனுடைய நிழலிலே தங்குகின்றார்கள்.

**சங்கீதம் 91:1**

**உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வவல்லவருடைய நிழலில் தங்குவான்.**

**ஜெபம்:** உங்களைத் தொடுகிறவன் அவருடைய கண்மணியைத் தொடுகிறான் என் உரைத்த தேவனே, இந்த மகத்துவமுள்ள பாக்கித்தை நான் அசட்டை செய்யாதபடிக்கு வாழ பிரகாசமுள்ள மனக் கண்களை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நம்மை சூழ்ந்திருக்கும் மேன்மை

அந்நிய நாட்டு படைகள், குதிரைகளையும் இரதங்களோடும் பலத்த இராணுவத்தோடும் வந்து, இராக்காலத்திலே, தேவனுடைய மனுஷனாகிய எலிஷா இருந்த பட்டணத்தை சுற்றி வளைந்துகொண்டார்கள். ஏனெனில் தேவ மனுஷன் அவர்களுடைய இரகசியமான சதித்திட்டங்களை வெளிப்படுத்தின்றான். எனவே, அவனை கைப்பற்றினால், அந்த தேசத்தை முற்றுகை போட்டு மேற்கொண்டுவிடலாம் என்று எண்ணிக் கொண்டார்கள். ஆனால், அந்த அந்நியர்கள், மெய்யான தேவனாகிய கர்த்தருடைய மனுஷன் என்பதின் பொருளை அறியாதிருந்தார்கள். அந்த அந்நியர்கள் மட்டுமல்ல, தேவனுடைய மனுஷனாகிய எலிஷாவின் வேலைக்காரனும் அதை அறியாதிருந்தான். அந்த வேலைக்காரன் அதிகாலமே எழுந்து வெளியே புறப்படுகையில், இதோ, இராணுவமும் குதிரைகளும் இரதங்களும் பட்டணத்தைச் சுற்றிக்கொண்டிருக்கக் கண்டான் அப்பொழுது வேலைக்காரன் தேவனடைய மனுஷனாகிய எலிஷாவை நோக்கி: ஐயோ, என் ஆண்டவனே, என்ன செய்வோம் என்றான். அதற்கு தேவனுடைய மனுஷன் பிரதியுத்தாரமாக: பயப்படாதே, அவர்களோடிருக்கிறவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம் என்றான். அப்பொழுது எலிசா விண்ணப்பம் பண்ணி: கர்த்தாவே, இவன் பார்க்கும்படி இவன் கண்களைத் திறந்தருளும் என்றான் உடனே கர்த்தர் அந்த வேலைக்காரன் கண்களைத் திறந்தார் இதோ, எலிசாவைச்சுற்றிலும் அக்கினிமயமான குதிரைகளாலும் இரதங்களாலும் அந்த மலை நிறைந்திருக்கிறதை அவன் கண்டான். ஆம் பிரியமானவர்களே, நாமும் மாம்ச கண்களால் நம் சூழ்நிலைகளை நோக்கி பார்ப்போமென்றால், எலிஷாவின் வேலைக்காரனைப் போல, பிரச்சனைகளை கண்டு பயப்படுகின்றவர்களாக இருப்போம். ஆனால், நம்முடைய ஆவிக்குரிய விசுவாசக் கண்களால் நோக்குவோமென்றால், தேவனாகிய கர்த்தரின் பாதுகாப்பை நாம் உணர்ந்து கொள்ளுவோம். ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்கள் சேனையாக திரண்டு வந்தாலும், நீங்கள் பயப்படவேண்டாம். ஆனால் ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள். அவருடைய அரணான பாதுகாப்புக்கு உங்களுக்குரியதாகும்.

**சங்கீதம் 34:7**

**கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்.**

**ஜெபம்**: என் தேவனாகிய கர்த்தாவே, மாம்ச கண்களால் நான் என் பிரச்சனைகளை நோக்காமல் விசுவாசக் கண்களால் நோக்கிப் பார்த்து, உம்முடைய மேன்மையான பாதுகாப்பை அறிந்து கொள்ள கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

வெள்ளி | மே 17 | 📖 மாலை வாசகம் – ஆதியாகமம் 15:1–6

# மகா பெரிய பலனும் கேடகமுமானவர்

**கலாத்தியர் 3:14**

ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கு வரும்படியாகவும்,

ஆபிரகாம் என்னும் மனிதனானவன், சுமார் எழுபத்தைந்து வயதாயிருந்தபோது, தேவனாகிய கர்த்தர் தாமே அவனை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ. நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன் நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். ஆபிரகாம் தேவனாகிய கர்த்தர் சொன்னபடியே, அவருடைய வாக்கை நம்பி, தன் தேசத்தையும், இனத்தையும், தகப்பனுடைய வீட்டையும் விட்டு, அந்நிய தேசத்திலே குடியிருந்தான். நான்உன்னைபெரிய ஜாதியாக்குவேன் என்று தேவனாகிய கர்த்தர் கூறியிருந்த போதும், கர்த்தர் அவனை அழைத்த நாளிலே, ஆபிரகாமிற்கும், அவன் மனைவியாகிய சாராளுக்கும் பிள்ளையில்லாதிருந்தது. கர்த்தர் அவர்களை அழைத்து அநேக ஆண்டுகள் சென்ற பின்பும் அவர்கள் இருவருக்கும் பிள்ளையில்லாதிருந்தது. கர்த்தர் மறுபடியும் ஆபிரகாமை நோக்கி: ஆபிராமே, நீ பயப்படாதே, நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன். நீ வானத்தை அண்ணாந்துபார், நட்சத்திரங்களை எண்ண உன்னாலே கூடுமானால், அவைகளை எண்ணு என்று சொல்லி, பின்பு அவனை நோக்கி: உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும் என்றார். அவன் கர்த்தரை விசுவாசித்தான், அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார். தேவனாகிய கர்த்தர் ஆபிரகாமை கொண்டு செய்ய நினைத்ததை மறுபடியும் ஆபிரகாமிற்கு உறுதிப்படுத்தினார். குறித்த காலம் நிறைவேறியபோது, அவர் சொன்னபடியே தம்முடைய வாக்கை செய்து முடித்தார். பிரியமானவர்களே, காலங்கள் கடந்து செல்லும் போது, கர்த்தர் உங்களுக்கு சொன்ன வார்த்தையை குறித்து உங்கள் மனதில் சந்தேகம் உண்டாகின்றதா? ஆண்டுகள் விரையமாகிவிட்டது என்ற பயம் மனதிலே உண்டாகின்றதா? கர்த்தரை நம்பி வந்தேன் நான் வெட்கப்பட்டு போய்விடுவேனா என்ற கவலை உண்டாகின்றதா? பயப்படாதிருங்கள்! ஆபிரகாமிற்கு உண்டானஆசீர்வாதம், கர்த்தராகிய இயேசு வழியாக நமக்கு உண்டாயிருக்கின்றது. சர்வ வல்லமையுள்ள தேவனாகியகர்த்தர்தாமே நமக்கு அடைக்கலமும் கேடகமும், மகாபெரிய பலனுமாயிருக்கின்றார். எனவே விசுவாசத்திலே உறுதியாய் நிலைத்திருங்கள்.

**ஜெபம்**: என் பெலனும் கேடகமுமான தேவனாகிய கர்த்தாவே, நீர் சொன்னத்தை செய்து முடிக்கும் தேவன்! அந்த விசுவாசத்திலே நான் அசையாமல் நிலைத்திருக்கும்படிக்கு நீர் என்னை காத்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

சனி | மே 18

📖 மாலை வாசகம் – அப்போஸ் 18:9 –10

# பயங்கரங்கள் சூழும்போது பயப்படாதிருங்கள்

ஆண்டவராகிய இயேசுவின் சுவிசேஷத்தின் நிமித்தம், அவருடைய சீஷனாகிய பவுல் என்பவர், சிறைக் கைதியாக, கப்பல் வழியாக ரோமாபுரிக்கு கொண்டு செல்லப்பட்டார். வழியிலே, கப்பலானது பெரும் புயங்காற்றில் அகப்பட்டது. கப்பலிலிருந்த யாத்திரிகள் யாவரும், அநேகநாளாய்ச் சூரியனாவது நட்சத்திரங்களாவது காணப்ப டாமல், மிகுந்த பெருங்காற்றுமழையும் அடித்துக்கொண்டி ருந்தப டியினால், இனி தப்பிப்பிழைப்போ மென்னும் நம்பிக்கை முழுமையும் அற்றுப்போயிற்று. அநேகநாள் அவ ர்கள் போஜனம்பண்ணாமல் இருந் தபோது, பவுல் அவர்கள் நடுவிலே நின்று: மனுஷரே, இந்த வருத்தமும் சேதமும் வராதபடிக்கு என் சொல் லைக்கேட்டு, கிரேத்தாதீவை விட்டு ப்புறப்படாமல் இருக்கவேண்டியதா யிருந்தது. ஆகிலும், திடமனதாயிருங்களென்று இப்பொழுது உங்களு க்குத் தைரியஞ்சொல்லுகிறேன். கப்பற்சேதமேயல்லாமல் உங்களில் ஒருவனுக்கும் பிராணச்சேதம் வராது. ஏனென்றால், என்னை ஆட் கொண்டவரும் நான் சேவிக்கிறவருமான தேவனுடைய தூதனானவன் இந்த இராத்திரியிலே என்னிடத்தில் வந்து நின்று: பவுலே, பயப்ப டாதே, நீ இராயனுக்கு முன்பாக நிற்கவேண்டும். இதோ, உன்னுடனே கூட யாத்திரைபண்ணுகிற யாவரையும் தேவன் உனக்குத் தயவுபண் ணினார் என்றான். பிரியமான சகோதர சகோதரிகளே, ஆண்டவராகிய இயேசு பவுலோடு கூட இருந்தார். அன்றைய நாளிலே, கப்பல் சேதம டைந்து உடைந்து போயிற்று. அவர்கள் நீந்தி கரைசேர்ந்து குளிர் காயும் போது, ஒரு விரியன்பாம்பு பவுலுடைய கையை கவ்விக் கொண் டது. அவனோ அந்தப் பாம்ப தீயிலே உதறிப்போட்டு, ஒரு தீங்கும் அடை யாதிருந்தான். இந்த உலகிலே, நம்முடைய ஜீவ யாத்திரையிலும் புயல்கள், சேதங்கள், எதிர்ப்புக்கள், பரியாசங்கள், பயங்கரங்கள் வந்து சூழ்ந்து கொள்ளலாம். ஆனால், அவையொன்றும் தேவ சித்தத்தை மேற்கொள்ளுவதில்லை. தேவ மனுஷனாகிய பவுல், தேவ ஆலய த்திலே பிரங்கித்தார், கைது செய்ய ப்பட்டு ஆலோசனைச் சங்கத்திற்கு முன் நின்றார். அடிக்கப்பட்டார், சிறையிலே போடப்பட்டார். ராஜாக்கள் முன்னிலையிலே நிறுத்தி விசாரிக்கப்பட்டார். எல்லா சூழ்நிலைகளிலும், கர்த்தர் அவர் இருக்கும் இடத்தில் அவரோடு இருந்தார். அதேபோல நாம் தேவ சித்தத்திற்கு நம்மை ஒப்புக் கொடுக்கும் போது கர்த்தர் இன்றும் என்றென்றும் நம்மோடிருந்து வழிநடத்திச் செல்வார்.

**ரோமர் 8:31**

தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?

**ஜெபம்**: உயர்விலும் தாழ்விலும் என்னோடிருக்கின்ற தேவனே, சுற்றி சூழும் பயங்கரங்களை கண்டு நான் மருண்டுபோய்விடாதபடிக்கு, பிரகாச முள்ள மனக்கண்களை தந்து என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நான் உன்னை மறப்பதில்லை

எத்தனை கஷ்டங்கள்? எத்தனை வேதனைகள்? "நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை" என்று அவர் சொல்லியிருக்கிறாரே. உண்மையிலே ஆண்டவராகிய இயேசு என்னோடு இருக்கின்றாரா? என்று ஒரு விசுவாசியானவன் தனக்குள்ளே நொந்து கொண்டான். அந்த விசுவாசியானவன் மாத்திரமல்ல, முன்னோடிகளாக சென்ற பரிசுத்தவான்களின் வாழ்க்கையிலும், பயங்கரமாக சூழ்நிலைகள் அவர்களுடைய விசுவாசக் கப்பலிலே மோதிய போது, கர்த்தர் என்னை மறந்தாரோ, கைவிட்டாரோ என்று அவர்களும் பயந்து திகிலடைந்த சந்தர்ப்பங்கள் உண்டு. இன்றைய நாட்களிலும், விசுவாசிகளின் வாழ்க்கையை அழுத்தும், நவீனமும் நாகரிகமுமான பிரச்சனைகள் சில வேளைகளிலே அவர்களையும் கலங்கடித்து விடுகின்றது. கரை நோக்கி வருகின்ற அலைகள் அன்று எப்படி இருந்ததோ, இன்றும் அப்படியே இருக்கின்றது. இன்றைய உலகின் சவால்கள், ஒருவேளை நாகரீகமானவைகளாக தோன்றலாம், ஆனால் அவைகள் எதுவுமே புதிதானவைகள் அல்ல. "நாம் தேவனால் உண்டாயிருக்கிறோமென்றும், உலகமுழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்றும் அறிந்திருக்கிறோம்". ஆதிமுதல் அவன் வஞ்சிக்கின்றவனாகவே இருக்கின்றான். அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே. எப்படியாக முன்னிருந்த உலகங்களிலே இச்சைகள் வளர்ந்து பெருகி நிறைந்திருந்தது என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள், நோவாவின் நாட்கள், பாபேல் கோபுரம் கட்டப்பட்ட நாட்கள், சோதோம் கோமோராவின் நாட்கள், பண்டைய எகிப்தின் நாட்கள் இப்படியாக, அந்தந்த காலங்களிலே இருந்த தேவ ஜனங்களுக்கு அன்றைய உலகங்கள் நாகரீகமாக இருந்தது. ஆனால், அவைகள் யாவினதும் அடிப்படை பிரச்சனைகள் ஒன்றாகவே இருந்தது. தேவனுடைய தீர்க்கரிசியாகிய எலியா, தான் ஒருவன் மாத்திரமே, தேவனை சேவிக்க இருக்கின்றேன் என்று நினைத்துக் கொண்டான். ஆனால், அவனைவிட இன்னும் ஏழாயிரம் பேர் தேவனுக்காக வைராக்கியம் கொண்டவர்களாக இருந்தார்கள். பிரியமானவர்களே, கர்த்தர் தம்முடையவர் களை ஒருபோதும் மறந்து போகின்றவர் அல்லர். எனவே சூழ்நிலைகளை கண்டு மனம் பதறாமல், விசுவாசத்தில் நிலைத்திருங்கள். உலகத்தை ஜெயித்தவர் என்றென்றும் உங்களோடு இருக்கின்றார்.

**ஏசாயா 49:15**

**ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை.**

**ஜெபம்:** இருக்கின்றவராக இருக்கின்ற தேவனே, நீர் ஒருபோதும் என்னை மறந்து போவதில்லை என்ற வார்த்தையை நான் இறுகப் பற்றிக் கொண்டு, விசுவாசத்திலே நிலைத்திருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

திங்கள்| மே 20

📖 மாலை வாசகம் – மத்தேயு 28:18–20

# கர்த்தர் என்னோடி இருக்கின்றாரா?

தேவனுடைய வாக்குத்தத்தங்கள் மாறாதவைகள் என்பதை நாம் நன்றாக அறிந்திருக்கின்றோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்திலே தம்முடைய திருப்பணியை பிதாவாகிய தேவனுடைய சித்தப்படியே முற்றாக நிறைவேற்றி முடித்த பின்னர், பரலோகத்திற்கு எழுந்தருளுவதற்கு முன்னதாக, "நான் உங்களுக்குக் கட்டளை யிட்ட யாவையும் அவர்கள் கைக் கொள்ளும்படி அவர்களுக்கு உப தேசம் பண்ணுங்கள் இதோ, உல கத்தின் முடிவுபரியந்தம் சகல நாட் களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்" என்று கூறியிருக்கி ன்றார். இதை மிகப் பெரிய பொறுப்புப் பணி (The Great Commission) என்று நாம் அழைக்கின்றோம். அவர், உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்று கூறி யிருக்கின்ற போதும், விசுவாசிகளுடைய வாழ்க்கையிலே, சிலவேளை களிலே ஏன் அவருடைய பிரசன்னத்தை உணர முடியாமல் இருக்கின் றது? ஏனெனில் நாம் தேவனுடைய வார்த்தையைவிட்டு விலகி காரிய ங்களை நடப்பிக்கும் போது நாம் வார்த்தையானவராகிய இயேசு கிறி ஸ்துவின் பிரசன்னத்தை உணராது போய்விடுகின்றோம். அவர் தாமே, தம்மை கிருபாதார பலியாக சிலுவை மரணத்திற்கு ஒப்புக் கொடுக்க முன்பதாக, அந்த இராத்திரியிலே, தம்முடைய சீஷர்களை நோக்கி: "என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன் கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாததுபோல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள். நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங் களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள் வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும். நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதி னால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்" என்று கூறியிருக்கின்றார். பிரியமானவர்களே, ஆண்டவர் இயேசுவின் சீஷர் களாகிய நாம் அவர் கட்டளையிட்ட யாவையும், அவர் கூறியபடியே உபதேசிக் கற்றுக் கொள்ள வேண்டும். அவருடைய வார்த்தைகள் ஜீவ னுள்ளவைகள். கலப்படம் அற்றவைகள். எனவே நாம் அவருடைய வார்த்தையில் நிலைத்திருந்து, அவற்றை உபதேசிக்கும் போது, வார்த் தையானவர் நம்மில் எப்போதும் நிலைத்திருக்கின்றதை உணர்ந்து கொள்வோம்.

**யோவான் 15:4**

**என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்தி ருப்பேன்;**

**ஜெபம்**: கிருபையும் சத்தியமுமுள்ள தேவனே, நான் உம்முடைய சத்திய வார்த்தைகளில் நிலைத்திருந்து, அந்த வார்த்தைகளை சுத்தமாக உபதேசி க்கும்படிக்கு நீர் என்னை பெலப்படுத்தி நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# ஏன் மனத்திருப்தியற்ற நிலை?

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த வாலிபனானவனுக்கு, பண்ணையின் முதலாளியாகிய அவன் தகப்பனானவர் பண்ணையிலே சில வேலைகளை கொடுத்திருந்தார். அந்த வேலையானது அவன் பிழைப்புக்குரியதாக இருந்ததால், நாளாந்தம் அந்த வேலைகளை ஒழுங்காக செய்து வந்தான். ஆனாலும், அவன் தன் தகப்பனானவரை சந்திக்கும் போது, அவன் மனதிலே திருப்பதியில்லாதிருந்தது. ஏனெனில், அவனுடைய சில தகாத நண்பர்களுடனான தொடர்பைக் குறித்து அவன் தகப்பனானவர், ஆண்டுகளுக்கு முன்னதாக, அவனுக்கு கூறியிருந்த அறிவுரையை அவன் முழுமையாக பின்பற்றாமல், தகாத வழிகளிலே செல்லும் நண்பர்களுடன் போக்கும் வரத்துமாக இருந்து வந்தான். ஊரார் மத்தியிலே, எழுத்தளவிலே, தன் தகப்பனானவரே தன் நண்பர்களைவிட முதன்மையானவரும், அன்புக்குரியவரும் என்ற நியதி இருந்த போதிலும், செயற்பாட்டளவிலே அவன் தன் தகப்பனானவரைவிட தன் நண்பர்களை மேன்மைப் படுத்தி வந்தான். அதனால், தகப்பனானவருடைய அறிவுரை அவன் மனிதிலே நிலைத்திருக்கவில்லை. அதனால், அவன் தகப்பனானவர் அவனை வெறுத்து தள்ளிவிட்டாரோ? இல்லை, மாறாக அவன் செல்லும் வழியைக் குறித்து கவலையடிந்தவராக இருந்தார். தன் குமாரனடைய தவறான தீர்மானங்களினால் அவனுக்கு ஏற்படக்கூடிய பாதகமான பின்விளைவுகளைக் குறித்து அவன் எண்ணமில்லாமல் நடந்து கொள்கின்றான் என்பதை கண்டு மிகவும் மனவருத்தப்பட்டார். தகப்பனானவர் அவனை தள்ளிவிடவில்லை, ஆனால், அவருடைய அறிவுரைகளை அவன் மீறி நடப்பதால், தகப்பனானவரை விட்டு தன்னை தானே அவன் தூரப்படுத்திக் கொண்டிருந்தான். பிரியமான சகோதர சகோதரிகளே, இவ்வண்ணமாகவே சில விசுவாசிகளும், வாரந்தோறும், தேவ காரியங்களை ஒழுங்காகவும், கிரமமாகவும் செய்து வருகின்றார்கள். ஆனால், சில ஆண்டுகளுக்கு முன் அவர்கள் வாழ்க்கையைக் குறித்து, தேவனானவர் உணர்த்திய தவறான வழிகளை காணாதவர்கள் போல நடந்து கொள்கின்றார்கள். அதனால், தேவனுடைய சமுகத்திலே ஆராதனைக்கு வரும் போதும், மனதிலே பூரண திருப்தியற்றவர்களாக இருக்கின்றார்கள். தேவ சமுகத்திலே உங்கள் மனம் எப்படி இருக்கின்றது? உங்களையே நீங்களே ஆராய்ந்து பார்த்தது கர்த்தரிடம் திரும்புங்கள்.

**புலம்பல் 3:40**

**நாம் நம்முடைய வழிகளைச் சோதித்து ஆராய்ந்து, கர்த்தரிடத்தில் திரும்பக்கடவோம்.**

**ஜெபம்:** என் தேவனாகிய கர்த்தாவே, என் ஆராய்ந்து, என் இருதயத்தின் நினைவுகளை முன்னறிந்தவரே, வேதனை உண்டாக்கும் வழிகளிலிருந்து நான் விடுதலையடையம்படி உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தேவனிடத்தில் அன்பாக இருக்கின்றீர்களா?

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த இளம் தம்பதிகள், திருமணத்திற்கு பின்பு, ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்து, புரிந்துணர்வோடு, "எனக்கு நீ, உனக்கு நான்" என்று சந்தோஷமாய் வாழ்ந்து வந்தார்கள். பல மாதங்கள் கடந்து சென்ற பின்னர், ஆரம்ப நாட்களிலிருந்த பரபரப்பு அற்றுப் போய்விட்டதால், அவர்களுடைய பழைய சுபாவங்கள் வெளிப்பட ஆரம்பித்தது. கணவனானவன், தன் நண்பர்களோடு சேர்ந்து, மதுபானம் அருந்துவெறிகொள்ள ஆரம்பித்தான். மனைவியானவளோ, கணவனுக்குரிய கனத்தை கொடுக்காமல், அவனோடு சண்டை செய்கின்றவளாய் இருந்து வந்தாள். அவைகள் மத்தியிலும், அந்த ஊரின் வழக்கப்படி, பெற்றோர் பின்பற்றி வந்த பாரம்பரியத்தின்படி, கணவனானவனுக்கு மனைவியைக் குறித்து அன்பு மனதிலே இல்லாதிருந்த போதிலும், தன் மனைவியை பற்றிய குறைகளை யாரும் பேசும் போது, அவை உண்மையாக இருந்தாலும், விட்டுக் கொடுக்க மாட்டான். அதைப் போல மனைவியானவளும், புருஷனானவனுக்கு அடங்காதவளாக இருந்தாலும், தான் தன் தாயானவளிடம் கற்றுக் கொண்டது போல "கல்லானாலும் கணவர், புல்லானாலும் புருஷன்" என்று வேறு யாரும் தன் கணவனைக் குறித்த குறைகளை பேச அனுமதிக்க மாட்டாள். இது எவ்வளவு போலியானதும், பரிதாபமான துமான குடும்ப வாழ்க்கை என்பதை சற்றி சிந்தித்துக் பாருங்கள். பிரியமானவர்களே, ஒரு காலத்திலே, நாம் இந்த உலக போக்கிற்கும், சம்பிரதயச் சடங்குகளுக்கும், பாரம்பரியங்களுக்கும் அடிமைப்பட்டிருந் தோம். தேவனாகிய கர்த்தர்தாமே, நம்முடைய மனக்கண்களை பிரகாசமடையச் செய்தபோது, நாம் பின்பற்றிய வழிகளை குறித்து வெட்கமடைந்து, அவைகளை விட்டுவிலகி, புதியும் ஜீவனுமாகிய பாதையை கண்டடைந்தோம். அந்த புதிதும் ஜீவனுமான பாதையிலே வெற்றிகரமாக நடப்பதற்கு, நாம் மறுபடியும் தேவனை அறியாத காலத்திலே பின்பற்றி வந்த உலக போக்கைகின் யுக்திகளை பின்பற்று வது சரியாகுமா? இல்லை. நாம் ஆண்டவர் இயேசு காட்டிய வழியிலே, அவர் வாழ்ந்த பிரகாரமாக வாழ வேண்டும். ஆனால், சிலரோ, ஆண்டவர் இயேசுவின் கற்பனைகளை தங்கள் இருதயத்தை விட்டு மனதார தள்ளிவிட்டு, மற்றவர்கள் மத்தியிலே ஆண்டவர் இயேசுவின் பாதுகா வலராக மாறிவிடுகின்றார்கள். அவரவர் தங்கள் வழிகளை ஆராய்ந்த றிவது அவரவருக்கு நன்மையாக இருக்கும்.

**யோவான் 14:15**

**நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்**

**ஜெபம்:** என் இருதய நினைவுகளை அறிந்த தேவனே, உலக வழக் கப்படி உம்மை சேவியாமல், நித்திய ஜீவனை அடையும்படிக்கு மன தார உம்முடைய கற்பனைகளை கைக் கொள்ள உணர்வுள்ள இருதய த்தைத் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# ஐசுவரியத்தின் மயக்கம்

நீங்கள் எவ்வளவு ஐசுவரியவானாக இருக்கின்றீர்கள் என்ற கேள்விக்கு, பதிலளிப்பதற்கு, மனிதர்கள் தங்கள் நிகரமதிப்பு (Net Worth) எத்தனை கோடி என்பதை சுட்டிக் காட்டுவார்கள். அதாவது, தங்கள் கடன்கள் யாவையும் செலுத்திய பின்பு, மிகுதியாக கையில் தேறியிருக்கும் பணமும், சொத்துக்களின் தொகையுமே ஒருவரின் நிகரமதிப்பாகும். அதனால், மனிதர்கள் சொத்துக்களை பெருக்கும்படிக்கு அயராது உழைக்கின்றார்கள். அதை அடைவதற்காக ஏறத்தாழ யாவற்றையும் தங்கள் வாழ்விலே விட்டுவிட ஆயத்தமுள்ளவர்களாக இருக்கின்றார்கள். எடுத்துக்காட்டாக, சொத்துக்களை பெருக்கும் வழியிலே, கணவன் மனைவியையும், மனைவி கணவனையும் விட்டுவிட ஆயத்தமுள்ளவர்களாக இருக்கின்றார்கள். சில மனிதர்களின் சொத்தை பெருக்கும் பயணத்திலே, பெற்றோர், பிள்ளைகள், சகோதர்கள், உறவினர், நண்பர்கள், சக வேலையாட்கள், பொதுமக்கள் யாவரினது உறவும் ஐக்கியமும் அவர்களுக்கு அற்ப மானதாகவே மாறிவிடுகின்றது. அவ்வண்ணமாக சொத்தை பெருக்கிய மனிதனைப் பார்த்து, அவன் சொத்துக்களோடும், பெயர் புகழோடும் சுகித்து வாழ்கின்றான் என்று மெச்சிக் கொள்கின்றார்கள். ஆனால், அந்த நிலையை அவன் அடைவதற்கு அவன் கொடுத்த கிரயத்தையும், இழந்து போல நன்மைகளையும், விட்டுவிட்ட மனித பண்புகளையும் குறித்து இன்று மனிதர்கள் கண்டு கொள்வதில்லை. இத்தகைய உலக போக்கை தாங்கள் பினபற்றுவதுமன்றி, வாழ்க்கையை குறித்து இன்னும் அறியாத சிறுவர்களையும் அவ்வழியே நடக்க வைக்கின்றார்கள். அதற்கு பெற்றோரும் ஆதரவாளர்ளாக மாறிவிடுகின்றார்கள். பிரியமான சகோதர சகோதரிகளே, உலக கவலையையும், ஐசுவரியத்தின் மயக்கத்தையும் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். அவை முட்கள் நிறைந்த நிலத்தைப் போல இருக்கும். தேவ வசனமாகிய விதை இருதயத்திலே வளர்ந்து கனி கொடுக்காதபடிக்கு, ஐசுவரியத்தின் மயக்கம் தேவ வசனத்தை நெருக்கிக் போடுவதால், வாழ்க்கை பலனற்றதாக மாறிவிடும். ஒருவனுக்கு எவ்வளவு ஆஸ்தி இருந்தாலும், அது அவனுக்கு ஜீவனல்ல. எனவே, தந்திரமாக மனிதர்களுடைய மனங்களை கவர்ந்து கொள்ளும் உலக போக்குகளை தேவனுடைய ஆசீர்வாதம் என்று கருதி வஞ்சிக்கப்பட்டுப் போகாமல், அவைகளை குறித்தது மிகவும் எச்சரிக்கையுள்ளவர்களாக இருங்கள்.

**மத்தேயு 13:22**

**உலகக்கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப்போடுகிறதினால், அவனும் பலனற்றுப்போவான்.**

**ஜெபம்:** அன்பின் தேவனே, இந்த உலகத்திலே பொக்கிஷங்களை சேர்த்து வைக்க பிரயாசப்படாமல், நிலையான அழியாத பொக்கிஷங்களை பரலோகிலே சேர்த்து வைக்க எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# எளியவர்களின் திடனானவர்

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த முதலாளியாவன், நியாயமான வழியிலே தன் வியாபார விவகாரங்களை நடத்தி, ஊர் மக்கள் மத்தியிலே நற்கீர்த்தியுடன் வாழ்ந்து வந்தான். அந்த ஊருக்கு புதிதாக வந்த வியாபாரியானவன் அந்த ஊரிலே தன் வியாபர ஸ்தாபனத்தின் கிளையொன்றை நிறுவினான். தன்னுடைய வியாபாரமானது, பெருக வேண்டும் என்பதற்காக, ஊரிலுள்ள முதலாளியாவனுடைய விவகாரங்களை குறித்த தவறாக விளரம்பரங்களை பிரசுரித்து வந்தான். அத்தகைய செயலானது, நாட்டின் சட்டத்திற்கு விரோதமானதாக இல்லாதிருந்த போதிலும், அவனுடைய பிரச்சாரங்கள் தவறானதும், அநியாயமானதுமாக இருந்தது. தன் வியாபாரத்தை மேம்படுத்தி, பணத்தை பெருக்க இதுவே வியாபார யுக்தி என்றுகூறிக்கொண்டான்.காலப் போக்கிலே, ஊரிலே நீதியாக வியாபாரம் செய்து வந்த முதலாளியானவனின் வியாபாரம் வீழ்ச்சி கண்டது. அவனும் அவன் குடும்பமும், பொருளாதார நெருக்கடிக்குள்ளானதால், அந்த ஊரைவிட்டு வேறு ஊருக்கு சென்றுவிட்டார்கள். புதிதாக வந்த வியாபாரியானவனோ, தன் வியாபாரத்திலே பெரும் எழுச்சியை கண்டான். அவனுடைய வியாபார யுக்திகளை சிலர் மெச்சினார்கள். ஊரார் மத்தியிலே நன் மதிப்பை பெறுவதை நோக்கமாக கொண்டு, அந்த ஊரிலே, மக்கள் மத்தியிலே சில நற்கிரியைகளை நடப்பித்தான். தன்னுடைய செயற்பாடுகளை குறித்து அவன் பெருமிதம் அடைந்தான். பிரியமான சகோதர சகோதரிகளே, தன்னுடைய வியாபாரம் மேம்படுவதற்காக, இன்னுமொரு குடும்பத்தை அநியாயமாக நஷ்டப்படுத்துவது, அந்த ஊருக்கு புதிதாக வந்த வியாபாரியானவனுக்கு அற்பமாக காரியமாக இருந்தது. ஆண்டுகள் கடந்து சென்றதும், அந்த ஊராரும் அவனுடைய அநியாயமாக செயல்களை மறந்து போனார்கள். ஆனால், பரலோகத்திலிருக்கின்றவர், சிறுமையும் எளிமையுமானவர்களை மறந்து போவாரோ? இல்லை, அவர் ஒருபோதும் மறந்து போவதில்லை. அவர் ஏழைகளின் பெலனும், எளியோரின் நம்பிக்கையுமாக இருக்கின்றார். அவனவன் தன் தன் கிரியைகளுக்குரிய பலனை அடைவான். எனவே, இந்த உலகத்தின் யுக்திகள் என்ற போர்வையிலே தேவனுக்கு விரோதமான அநியாயங்களை நடப்பிக்காதபடிக்கு எச்சரிக்கையுள்ளவர்களாக இருங்கள்.

**ஏசாயா 25:4**

நீர் ஏழைக்குப் பெலனும், நெருக்கப்படுகிற எளியவனுக்குத் திடனும், பெருவெள்ளத்துக்குத் தப்பும் அடைக்கலமும், வெயிலுக்கு ஒதுங்கும் நிழலுமானீர்.

**ஜெபம்:** உன்னதங்களில் வாசம்பண்ணுகிற நம்முடைய தேவனாகிய கர்த்தாவே, இந்த உலகத்தின் யுக்திகளின் நான் அகப்பட்டு உணர்வற்றவனாய் போகதபடிக்கு என்னை காத்துக் கொள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

📖 மாலை வாசகம் – மத்தேயு 6:33

# தேவனால் உண்டாகும் ஆசீர்வாதம்

ஒரு மனிதனானவன், தன் குடும்பம் சிறப்பாக வாழ வேண்டும் என்பதை நோக்கமாக கொண்டு, திருமணமான நாள் முதல், கடுமையாக உழைத்து வந்தான். மாதாந்தம் தன் தேவைக்கு அதிகமாக உழைத்த நாட்கள் முடிவடைந்தது, ஒரு வருடத்தின் தேவைகளுக்கு அதிகமாக உழைத்த நாட்களும் கடந்து சென்றது, இப்போது சந்ததிக்கு தேவையானதை சேர்க்க வேண்டும் என்ற நிலைக்கு கடந்து சென்றுவிட்டான். அவன் தன் மனைவிக்கு தேவைக்கு அதிகமான பொருட்களையும், பணத்தையும் கொடுத்தான். ஒரு மனைவிக்கு தேவையானபணம், பொருள் போன்றவற்றை அவள் பல வழிகளிலே பெற்றுக் கொள்ளலாம். ஆனால் ஆதரவற்ற நேரங்களிலே, ஒரு கணவனுடைய அன்பையும், ஆதரவையும் யாரால் கொடுக்க முடியும்? அன்பையும் ஆதரவையும் அவள் தேடிய ஆண்டுகள் கடந்து போய் விட்டது. அன்பையும் ஆதரவையும் கொடுத்து, ஐக்கியமாக நாட்களை களிக்கும் நாட்களளை கணவனானவனும் இழந்து போனான். பிள்ளைகளுக்கு கல்வியையும், பொருட்களையும், பணத்தையும், பலரால் கொடுக்க முடியும். ஆனால் தந்தையின் ஆதரவும், அரவணைப்பும், வழிநடத்து தலும் தேவையான ஆண்டுகளிலே யாரால் அதை கொடுக்க முடியும்? அந்த ஆண்டுகளையும் அந்தத் தகப்பனானவன் இழந்து போனான். எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம் பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் எனக்கு பிரயோஜனம் ஒன்றுமில்லை என்று தேவ அன்பை குறித்து பரிசுத்த வேதாகமம் கூறுவதை பார்க்கின்றோம். எனவே, ஒரு மனிதனானவன், உண்மையான அன்பு இல்லாமல், தன் ஆஸ்திகள் எல்லாம் அன்னதானம் பண்ணக்கூடிய, ஆற்றலுள்ளவனாக இருக்கின் றான். குடும்பத்தின் பிரதானமான தேவை பணம் என்று கருதி வாழும் மனிதர்கள் இவ்வண்ணமாகவே இருக்கின்றார்கள். “கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா. கர்த்தர் நகரத்தைக் காவாராகில் காவலாளர் விழித்திருக்கிறது விருதா.” “கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ, அவன் பாக்கியவான். உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய் உனக்குப் பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும். உன் மனைவி உன் வீட்டோரங்களில் கனிதரும் திராட்சக்கொடியைப்போல் இருப்பாள் உன் பிள்ளைகள் உன் பந்தியைச் சுற்றிலும் ஒலிவமரக் கன்றுகளைப்போல் இருப்பார்கள்.” இது தேவனால் உண்டாகும் ஆசீர்வாதம்.

**சங்கீதம் 128:1**

கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ, அவன் பாக்கியவான்.

**ஜெபம்**: பரலோக தேவனே, இந்த உலகத்தின் போக்கில் இழுப்புண்டு, அந்தந்த காலத்திற்கென்று நீர் வைத்திருக்கும் உம்முடைய ஆசீர்வாதங்களை நான் இழந்து போகாதபடிக்கு எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# உலக தத்துவங்கள்

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த மனிதனானவன், தன் சின்ன வயதிலிருந்தே கல்வி கற்பத்தில் மிகவும் ஆர்வமுள்ளவான இருந்து வந்தான். பட்ட படிப்புக்களை முடித்த பின்பும், ஒன்றின் பின் ஒன்றாக பல்வேறு கலைகளையும் கற்றுக் கொண்டிருந்தான். சிறப்பான உத்தியோகத்திலே அமர்ந்த அந்த மனிதானாவன், பல பதிவியுயர்வுகளை பெற்று, பல்வேறு முதலீடுகளை செய்து, ஐசுவ ரியத்தை தினமும் பெருக்குவதற்காக அயராது உழைத்து வந்தான். அவன் வயது கடந்து போவதால், அவனு டைய உறவினர், நண்பர்களில் சிலர், அவனடைய திருமணத்தைபற்றி அவனை விசாரித்தார்கள். அதற்கு அந்த மனிதனானவன், சிரித்தபடி அவர் களை நோக்கி: மனைவியையும் திரும ணத்தையம் வேண்டிய நேரம், வேண் டிய பிரகாரமாக பெற்றுக் கொள்ள லாம். அவற்றிற்கெல்லாம் அடிப்படையானது பணம். ஆனால், பண த்தை வேண்டிய நேரம், வேண்டிய பிரகாரம் உழைத்துவிட முடி யாது. காற்றுள்ள போது தூற்றிக் கொள்ள வேண்டும், என்று தன் சொந்த வாழ்க்கைத் தத்துவத்தை பெருமிதமாக கூறிக் கொண்டான். பிரியமான சகோதர சகோதரிகளே, அழுக்குகள் இருக்கும் இடத்தை நாடி ஈக்கள் வருவது போல, பணத்தை விரும்புவர்கள், அது யாரிடம் இருந்தாலும் அதை நாடிச் செல்ல ஆயத்தமுள்ளவர்களாக இருப்பார்கள். அந்த உறவின் ஐக்கியம் அன்பு அல்ல, மாறாக பண ஆசையே அந்த உற வின் ஐக்கியமாக இருக்கும். மெய்யான அன்பில் நிபந்தனைகள் ஏதும் இருக்காது. ஆனால், இன்று மிகையாக செல்வத்தையுடையவர்கள் திரு மணம் செய்து கொள்ள முன்பே, அந்த திருமணத்தை எப்படி உடைக்க லாம் என்ற பல நிபந்தனைகளை கொண்ட சட்டபூர்வமான ஆவணக களில் கைசாத்திட்டுக்கொள்கின்றார்கள். இது உலகத்தின் போக்கு. இது சில மனிதர்களுக்கு நன்மையாக தோன்றும் வழியாக இருக்கின்றது. ஆனால், அதன் முடிவோ நன்மைகேதுவாய் இருப்பதில்லை என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. நிபந்தனையற்ற மெய்யான அன்பை பிதாவாகிய தேவன்தாமே, தம்முடைய திருக்குமாரனாகிய இயேசு வழி யாக நமக்கு வெளிப்படுத்தினார். அவர்பற்றிக் கொண்டு, அவர் நமக்கு காடிய வழியில் நாம் வாழ்வோமென்றால், இந்தப் பூமியிலே நம்மு டைய வாழ்வும், அதன்முடிவில் நமக்கு உண்டாகும் பலனும் அருமை யானதாகவே இருக்கும்.

**சங்கீதம் 112:1**

அல்லேலூயா, கர்த்தருக்குப் பயந்து, அவருடைய கட்டளைகளில் மிகவும் பிரியமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.

**ஜெபம்:** அன்பின் பரலோக தகப்பனே, சுயஞானத்தில் சார்ந்து அறியாமை யிலே புத்தியீனமான வாழ்க்கையை வாழாதபடிக்கு, உமக்கு பயந்து உம் வார்த்தைகளின் வழியிலே நான் வாழ எனக்கு உணர்வள்ள இருயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# காலத்தை நிதானித்து அறியுங்கள்

அவனவன் தன் தன் மனதிற்கு விருப்பமானதை செய்ய வேண்டும். தன் வாழ்வின் கனவை அவனவன் பின்பற்ற வேண்டும் என்று கொள்கை பெருகிக் கொண்டிருக்கும் உலகிலே நாம் வாழ்ந்து வாழ்கின்றோம். கல்வித் துறையிலே நாட்டமுடையவன் அதை தொடரட்டும். வியாபா ரத்திலே விரும்பமுள்ளவன் அதை செய்யட்டும். விளையாட்டுத் துறை யிலே சிறந்து விளங்குப வன் அவன் அழைப்பை நிறை வேற் றட்டும். இப்படியாக ஒவ்வொரு துறையையும்பிரித்து வைத்த மனி தனானவன், தேவ பக்தியையும் அவற்றில் ஒரு துறையாக எண் ணிக் கொள்கின்றான். இவ்வ ணமாகவே இளம் சந்ததிக்கும் அதை கற்றுக் கொடுத்து வருகின்றார்கள். இன்று மனிதர்கள் அதை செய்தால் பாவமா? இதை கற்பதில் தவறென்ன? அப்படி வியாபாரம் செய்தால் கடவுள் கோபித்து விடுவாரோ? என்று கூறிக் கொள்கின் றார்கள். அவர்கள் மாத்திரம் அல்ல, சில விசுவாசிகளும் கூட அவர்க ளோடு இணைந்து, தங்கள் இதய வாஞ்சைகளை நியாயப்படுத் துவத ற்கு, கேள்விக்கு மேல் கேள்விகளை கேட்டுக் கொள்கின்றார்கள். பரிசு த்த வாழ்வு வாழும்படிக்கு பிறப்பதற்கு முன்னமே முன்குறிக்க ப்பட்ட சகோதர சகோதரிகளே, ஒரு மனிதனானவன், எந்த துறையிலி ருந்தா லும், பரலோகம் செல்வதற்கு அவன் பின்பற்ற வேண்டிய வழி ஒன்று உண்டு. சத்தியம் ஒன்று உண்டு. அந்த வழியிலே ஜீவன் உண்டு. கர்த் தராகிய இயேசுவே பரலோகத்திற்கு செல்லும் வழியாக இருக்கின்றார். கர்த்தராகிய இயேசுவை அறிந்தவன், கர்த்தாவே! கர்த்தாவே! என்று அவரை அழைப்பதினால் நித்திய ஜீவனை அடைவதில்லை. மாறாக, பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை இந்த பூவுலகிலே நிறை வேற்றுபவனே, நித்திய ஜீவனை அடைவான் என்ற கர்த்தராகிய இயேசு கூறியிருக்கின்றார். இன்று, பொதுவாக பல துறைகளை நாடும் மனிதர் களின் குறுகிய காலத்திலே பணத்தையும் புகழையும் பெருக்கிக் கொள் வதையே நோக்கமாக கொண்டிருக்கின்றார்கள். அதனால், தாங் கள் தெரிந்து கொண்ட துறையிலே மிகவும் ஆர்வம் காட்டுகின்றார்கள். திரா ளாக செல்வத்தில் களிகூருகின்றது போல, உம்முடைய சாட்சிகளின் வழி யிலே நான் களிகூறகின்றேன் என்று ஒரு தேவபக்தன் பாடியிருக்கி றான். யாவருக்கும் ஒரு வாழ்வு இவ்வுலகிலே கொடுக்கப் பட்டிருக்கி ன்றது. அதை தேவ வார்த்தையின் வழியிலே வாழ்வதற்கு தன்னை ஒப்புக் கொடுக்கின்றவன், பாக்கியமுள்ள மனிதனாக இருக்கின்றான்.

**எபேசியர் 5:16**

**நாட்கள் பொல்லாதவைகளா னதால் காலத்தைப் பிரயோஜ னப்படுத்திக்கொள்ளுங்கள்.**

ஜெபம்: பரம ஞானத்தை தந்து நடத்தும் தேவனே, ஞானமற்றவர்களை ப்போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப்போலக் கவனமாய் உம்முடை ய வழியிலே நடந்து என் வாழ்நாட்களை பிரயோஜனப்படுத்திக் கொள்ள கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# யாரோடு ஐக்கியம்?

இவர்களுடைய ஆசை விருப்பங்களும் போக்குகளும் எங்களுடைய குடும்பத்தின் போக்கிற்கு ஒத்துப்போகின்றது, எனவே நாங்கள் இவர்களோடு நட்பாயும், போக்குவரத்துமாக இருக்கின்றோம் என்று ஒரு குடும்பத்தினர், சபையிலுள்ள இன்னுமொரு குடும்பத்தினரோடு ஐக்கியமாயும், ஆதரவாயும் இருந்துவந்தார்கள். இது பாராட்டத்தக்க வேண்டிய விடயமாக இருக்கின்றது. ஆனாலும் நம்முடைய வாழ்வானது, நாம் போட்டுக்கொண்ட குறுகிய வட்டத்திற்குள் மட்டுமல்ல, ஆண்டவராகிய இயேசுவின் வார்த்தையின் வட்டதிற் குள் இருக்க வேண்டும். "உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகித்தால், உங்களுக்குப் பலன் என்ன? பாவிகளும் தங்களைச் சிநேகி க்கிறவர்களைச் சிநேகிக்கிறார்களே. உங்களுக்கு நன்மைசெய்கிறவர் களுக்கே நீங்கள் நன்மைசெய்தால், உங்களுக்குப் பலன் என்ன? பாவிகளும் அப்படிச் செய்கிறார்களே. திரும்பக் கொடுப்பார்களென்று நம்பி நீங்கள் கடன் கொடுத்தால் உங்களுக்குப் பலன் என்ன? திரும்பத் தங்களுக்குக் கொடு க்கப்படும்படியாகப் பாவிகளும் பாவிகளுக்குக் கடன் கொடுக்கி றார் களே." என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். அதுமட்டும ல்ல, நம்முடைய ஐக்கியத்தின் மையப் பொருள் என்ன? பொதுவான கல்வி, வேலை, அந்தஸ்து, விளையாட்டு துறை நாட்டங்கள், பொழுது போக்கு போன்றவற்றை மையமாக கொண்டதாக இருந்தால், அவை இந்த உலகத்திற்கேற்ற மேன்மையான ஐக்கியமாகவே இருக்கும். அப் படியிருக்காமல், நம்முடைய ஐக்கியமானது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை மையமாக கொண்டதாக இருக்க வேண்டும். அப்பொழுது, அந்த ஐக்கியமானது பரலோகத்திற்குரிய மேன்மையுள்ளதாக இருக்கும். எனவே, ஒருவர் நன்மை செய்தால் மாத்திரம் நான் அவ னுக்கு நன்மை செய்து, அவனோடு ஐக்கியமாக இருப்பேன், எனக்கு தீமை செய்கின் றவன், அவன் உடன் சகோதரனாக இருந்தாலும், நான் நன்மை செய்ய மாட்டேன் என்ற எண்ணமுடையவர்களாக இருக்கக் கூடாது. நாம் கிறி ஸ்துவோடு ஐக்கியமாக இருந்தால், நன்மை செய்து பாடநுபவிக்கின்ற எண்ணமுடையவர்களாக இருக்க வேண்டும். நம்முடைய இரக்கமா னது இந்த உலகத்திற்கு ஏற்புடையதாக இருக்காமல், பிதவாகிய தேவ னுடைய பார்வையிலே ஏற்புடையதாக இருக்கும்படி வளர்ந்து பெருகு வோமாக.

**லூக்கா 6:36**

ஆகையால் உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிற துபோல, நீங்களும் இரக் கமுள்ளவர்களாயிருங்கள்.

**ஜெபம்**: அன்பின் பரலோக பிதாவே, நான் தீமையினாலே வெல்லப்படா மல், தீமையை நன்மையினாலே வெல்லுகின்ற வாழ்க்கை வாழு ம்படிக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# "பின்விளைவுகள்"

ஒரு ஊரிலே இயங்கி வந்த, உற்பத்திசாலையின் முதலாளியானவன் உற்பத்திசாலையின் விவகாரங்களை நீதியும் நியாயமுமான முறையிலே நடத்தி வந்தான். ஒருநாள் அவன் தன்னுடைய மகனானவனை நோக்கி: நீ நாளை தொழிற்சாலைக்குக் போய், அங்கே பல வருடங்களாக மேய்பார்வைகயானாக வேலை புரிந்து வரும் உழியனை பதவி இறக்கம் செய்து, சில வருடங்களாக தொழிலாளியாக வேலை புரிந்து வரும் ஊழியனை, மேற்பார்யாளராக பதவி உயர்வு செய் என்றும் கூறினார். அதை கேட்ட மகனானவன், இது எப்படியாக முடியும் என்று, சற்று தயக்கமடைந்தவனாக, தன் தகப்பனானவரை நோக்கி:தந்தையே, அந்த மேய்பார்வையாளன், பல ஆண்டுகளாக வேலை பார்த்து வருகின்றான். அவனுக்கு கீழே பணி புரியும் தொழிலாளர்களில் சிலர் அவனுடைய நண்பர்களும், உறவினரும் அங்கே அவனோடு வேலை செய்கின்றார்கள். இப்படியான மாற்றங்கள், உற்பத்திசாலையிலே பாதகமான பின்விளைவுகளை உண்டு பண்ணலாம் என்று கூறினான். அதற்கு தகப்பனானவர்: மகனே, நீ கூறுவதில் கருத்து உண்டு. இந்த மாற்றம் என்னுடைய பூரண மனவிருப்பம் அல்ல ஆனால் இந்த மாற்றத்தை இப்போது செய்ய வேண்டிய நேரமாக இருக்கின்றது. எனவே, நான் சொல்லுகின்றபடி செய், அதன் பின்விளைவுகள் அனைத்தையும் நான் பார்த்துக் கொள்வேன் என்றார். ஆம் பிரியமான சகோதர சகோதரிகளே, பிதவாகிய தேவனுடைய சித்தத்தை நம்முடைய வாழ்வில் நடப்பிப்பதென்பன் கருபொருளை நாம் நன்றாக அறிந்து கொள்ள வேண்டும். பிதவாகிய தேவனுடைய சித்தம் செய்வதென்பது, விசுவாசியாவன் தன்னுடைய விருப்பங்களை செய்வதென்பது பொருளல்ல. எப்போதும், மற்றவர்கள் விரும்பும் கிரியைகளையோ செய்வதோ அல்லது அவர்கள் கேட்க விரும்பும் மனதிற்கினிய சொற்களை பேசுவதோதென்பதோ இல்லை. சில வேளைகளில் நம்முடைய வாழ்விலும், பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை நடப்பிப்பதால் வரக்கூடிய பின்விளைவுகளை குறித்து, நாம் பயந்து கலக்கமடைவதுண்டு. ஆண்டவராகிய இயேசுதாமே மதபற்றுள்ளவர்களின் உண்மையான நிலைமையை எடுத்து கூறிய போது, அவர்கள் மூர்க்கம் கொண்டு அவரக்கு கல்லெறிய வேண்டும், அவை கொல்ல வேண்டும் என்று முற்பட்டார்கள், ஆனால், மரிக்க வேண்டி நேர்ந்தாலும் பிதாவின் சித்தம் செய்வதையே அவர் மேன்மையாக எண்ணினார்.

> **யோவான் 6:38**
>
> **என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கி வந்தேன்.**

**ஜெபம்:** சர்வ வல்லமையுள்ள தேவனே, மனிதர்களின் முகஸ்திகளை பெற்றுக் கொள்வதைவிட உம்முடைய சித்தத்தை நிறைவேற்றி முடிப்பதையே எப்போதும் மேன்மையான எண்ணிக் கொள்ள கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# யாருக்கு செவிகொடுப்பது?

ஆதி அப்போஸ்தலரின் நாட்களிலே, ஆண்டவராகிய இயேசுவின் சீஷர்கள், ஆண்டவராகிய இயேசுவின் நாமத்திலே அற்புதங்களை செய்து, அவரே வாக்களிக்கப்பட்ட மீட்பர் என்றும், அவருடைய நாமத்தினாலே மனித குலத்திற்கு உண்டான இரட்சிப்பை குறித்து ஜனங்களுடனே பேசிக்கொண்டிருக்கையில், ஆசாரியர்களும் அதிகாரிகளும் அவர்களிடத்தில் வந்து, அவர்கள் ஜனங்களுக்கு இயேசுவின் நாமத்தைக் குறித்து உபதேசிக்கிறதினாலும், உயிர்தெழுதலைக் குறித்து பேசுவதினாலும், அவர் மரித்தோரிலிருந்து உயிர்தெழுந்ததை பிரசங்கித்ததினாலும், சினங்கொண்டு, அவர்களைப் பிடித்து, காவலில் வைத்தார்கள். மறுநாளிலே கூட்டங்கூடி, அவர்களை நடுவே நிறுத்தி: நீங்கள் எந்த வல்லமையினாலே, எந்த நாமத்தினாலே, அற்புதங்களை செய்தீர்கள் என்று கேட்டார்கள். அப்பொழுதுபேதுரு பரிசுத்த ஆவியினாலே நிறைந்து, அவர்களை நோக்கி: உங்களால் சிலுவையில் அறையப்பட்டவரும், தேவனால் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவருமாயிருக்கிற நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலேயே இவன் உங்களுக்கு முன்பாகச் சொஸ்தமாய் நிற்கிறானென்று உங்களெல்லாருக்கும், ஜனங்களெல்லாருக்கும் தெரிந்திருக்கக்கடவது. என்று கூறினார். ஆசாரியர்களும், அதிகாரிகளும் இயேசுவின் நாமத்தைக்குறித்து எவ்வளவும் பேசவும் போதிக்கவும் கூடாதென்று அவர்களுக்குக் கட்டளையிட்டார்கள்.இன்றைய நாட்க ளிலே, உலகத்தார் மத்தியில் மாத்திரம் அல்ல, சில விசுவாச மார்க்கத்தார் மத்தியிலும் மனிதர்களை உள்வாங்கும் பொருட்டு, இயேசுஎன்ற நாமத்தை பேசாதிருக்கின்றார்கள். நவீன போக்கு என்ற ரீதியிலே சபைகளின் அமைப்பு மாற்றப்படுவது மாத்திரமல்ல, இயேசு என்ற நாமம் கொண்ட வசனங்களை காண்பதும் மிகவும் அரிதாகவே இருக்கின்றது. அன்றைய நாளிலே, தேசத்திலிருந்த ஆசாரிகளும், அதிகாரிகளும், இயேசு என்ற நாமத்தை தணிக்கை செய்ய முயன்றார்கள் ஆனால் சீஷர்களோ, மனிதர்களுடைய அங்கீகாரத்தைவிட, உபத்திரவங்கள் வந்தாலும் தேவ சித்தத்தை நிறைவேற்றுவதையெ மேன்மையாக எண்ணினார்கள். இன்று உங்கள் மனநிலை எப்படியாக இருக்கின்றது? நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை.

**அப்போஸ்தலர் 4:19**

**தேவனுக்குச் செவிகொடுக்கிறதைப்பார்க்கிலும் உங்களுக்குச் செவிகொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ என்று நீங்களே நிதானித்துப்பாருங்கள்.**

**ஜெபம்**: பரலோக தேவனே, என்னுடைய சொந்த யுக்திகளால் தேவ காரியங்களை செய்வதற்கு வகை தேடாமல், உம்முடைய வார்த்தையின் படி நான் தேவ சித்தத்தை செய்து முடிக்க என்னை பெலப்படுத்தி நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தேவனைக் கவர்ந்து கொள்ளுங்கள்

ஒரு ஊரிலே இருந்த கடையின் முதலாளியானவன், அந்த ஊரிலுள்ள மக்கள் கவர்ந்து கொள்வதற்காக, வருடாந்த மலிவு விற்பனை நாளொன்றை நியமித்தான். அதற்காக அவன், துண்டு பிரசுரங்களையும், சுவரொட்டிகளையும் தயார் செய்த போது, அந்தக் கடையிலே இருக்கும் பொருட்களில், தான் ஆகக்குறைந்த விலையிலே மலிவாக விற்கப்படும் பொருளின் மதிப்பை அதிலே அச்சிட்டான். அந்த மலிவான விலையை கண்ட மக்கள் திரண்டு வந்தார்கள். கடைக்கு வந்த பின்னர், பாவனைக்கு அத்தியவசியமில்லாத ஒரு பொருள் மட்டுமே மலிவாக இருப்பதை கண்டு ஏமாற்றமடைந்தார்கள். இப்படியாக இரண்டு, மூன்று தடவைகள் நடந்து முடிந்த பின்பு, மக்கள் அந்த கடைக்காரனின் உண்மையற்ற மனநிலையை நன்றாக அறிந்து அதற்கேற்ப செயற்படும்படி ஆரம்பித்தார்கள். பிரியமான சகோதர சகோதரிகளே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தாமே தம்முடைய விலை மதிக்கமுடியாத இரத்தத்தினாலே மனித குலத்திற்கு இரட்சிப்பு உண்டாகும் வழியை ஏற்படுத்தினார். அந்த அருமையான இரட்சிப்பை இலவசமாக பெற்றுக் கொள்ளும்படி வழியை வகுத்திருக்கின்றார். ஆனால், இன்று சிலரோ இந்த உலகத்திலே நடக்கும் மலிவு விற்பனையை போல சுவிசேஷத்தின் மேன்மையை அற்பமாக்கிவிடுகின்றார்கள். மக்களை கவர்ந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன், மனிதர்களின் பெயர்களையும், பலவிதமான கண் களை கவரும் செயற்பாடுகளையும் நடத்துகின்றார்கள். நாமோ, தேவனுக்கு முன்பாக எப்போதும் உண்மையுள்ளவர்களாக காணப்பட வேண்டும். மனித யுக்திகளால் வரும் பலன் அற்பமே. ஆண்டவராகிய இயேசுவின் ஆதி சீஷர்கள், சுவிஷேசத்தை அறிவிப்பதெப்படியென்று பரிசுத்த ஆவியினாலே வழிநடத்தப்பட்டார்கள். அன்று மட்டுமல்ல, என்றென்றும் எங்களோடிருந்து சகல சத்தியத்திலும் நம்மை நடத்தும்படிக்கு, தேவ ஆவியானவர், நம்மோடு இருக்கின்றார். எனவே, சுவிஷேத்தினிமித்தம் நீங்கள் நடப்பிக்கும் கிரியைகள் தேவனுடைய பார்வையிலே ஏற்புடையதாக இருக்க வேண்டும். மனிதர்கள் முன்னிலே தேவ நாமம் தூஷிக்கப்படாதபடிக்கு நீங்கள் தேவ சித்தத்தை நடப்பிக்க தேவ வசனத்திற்கு விரோதமான காரியங்களை செய்யாதபடிக்கு எச்சரிக்கையுள்ளவர்களாக இருங்கள்.

**யோவான் 14:16**

**நான் பிதாவை வேண்டிக் கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்.**

**ஜெபம்:** விலைமதிக்கமுடியாக இரட்சிப்பை எனக்கு தந்த தேவனே, நான் என் மனவிருப்பப்படி, மனிதர்களை கவர்ந்து கொள்ளாமல், உம்முடைய சித்தப்படி சுவிசேஷத்தை அறிவிக்க என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.